REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன்
2024 மே 9 வியாழக்கிழமை

வரு. 92 இல. 110 | Thursday 09, May, 2024 | 16பக்கங்கள் | 50/-




**பாராளுமன்றத்தில் அமர சட்டரீதியாக தகுதியற்றவர்**

# டயனா எம்.பியாக செயற்பட முடியாது

**மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் நேற்று தீர்ப்பு**



**பிரிட்டன் குடியுரிமையை துறந்ததையோ**
**இலங்கை குடியுரிமையை பெற்றதையோ**
**நீதிமன்றத்தில் நிரூபிக்க டயனா தவறிவிட்டார்**
**என்றும் உயர் நீதிமன்றம் தெரிவிப்பு**

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே இலங்கை பிரஜை அல்ல என்பதால், அவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கவும் அப்பதவியில் செயல்படவும் தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது. மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் நேற்று (08) இத்தீர்மானத்தை அறிவித்தது. டயனா கமகே தனது பிரிட்டன் குடியுரிமையை துறந்ததையோ அல்லது நாட்டின் குடியுரிமையைப்

06

# கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்த அரசின் திட்டங்களுக்கு பங்களிக்க வேண்டும்

**2,100 புதிய கிராம சேவகர்கள் நியமன நிகழ்வில் ஜனாதிபதி**



விவசாயத்துறையை அபிவிருத்தி செய்யாமல் கிராமிய பொருளாதாரத்தைப் பலப்படுத்த முடியாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் உட்பட கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஆரம்பிக்கும் சகல

06



## நிதி இராஜாங்க அமைச்சருடன் வாகன இறக்குமதியாளர் சந்திப்பு

வாகன இறக்குமதி தடைகளை நீக்குவது மற்றும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பிலான விசேட அறிக்கையை வாகன இறக்குமதியாளர்கள் தமக்கு வழங்குவரென, எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

06

**வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புகள்**

## ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பு



வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையை ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும், முழுமையான கடன் மறுசீரமைப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலம் நாட்டின் கடன் சுமையை 17 பில்லியன் அமெரிக்க டொலர்களால் குறைக்க முடியுமென்றும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கடன் தவணையைப் பெற்ற பின்னர், நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

06

## MOP உர மானியத்தொகை விவசாயிகளின் கணக்கில் வைப்பீடு

**தலா 15,000 ரூபா வழங்கப்படுவதாக அரசாங்கம் அறிவிப்பு**



விவசாயத் திணைக்களத்தின் மூலம் Muriate of Potassium உரத்தை (MOP) இலக்காகக்கொண்டு முதல் உர மானியத் தொகையாக 15,000 ரூபா விவசாயிகளின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இத்தொகைகள், கடந்த (07) முதல் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டதாகவும் நெற் செய்கையை நிறைவு செய்துள்ள விவசாயிகளுக்கு

06

## இராணுவம் மற்றும் இந்திய தூதரகம் இணைந்து செயற்கை கால் தயாரிப்பு



ராகம ரணவிரு செவன புனர் வாழ்வு மையத்தில் செயற்கை கை, கால்களை தயாரிக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பமாகி உள்ளன. இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஒத்துழைப்புடன் இலங்கை இராணுவம் இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

06

## அதானியின் மின்திட்டம் நிறைவேறினால் மின் கட்டணத்தில் நிவாரணம் வழங்கலாம்

**சபையில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



இந்தியாவின் அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால், மக்களின் மின் கட்டணத்தில் குறிப்பிடத்தக்களவு நிவாரணத்தை வழங்க முடியுமென மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டமூல தயாரிப்பு நடவடிக்கைகள் ஜூன் மாதத்தில் நிறைவடைந்ததும், அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

06



**03**
**பேருவளையில் திண்மக்கழிவகற்றல் ஒழுங்கமைக்கப்படுவது அவசியம்**
**பிரதமர் உடனடி கவனம் செலுத்த வேண்டும்**

## டயனாவின் வெற்றிடத்துக்கு முஜிபுர் ரஹ்மான் நியமனம்?



இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட முடியாதென்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து, வெற்றிடமாகியுள்ள தேசியப் பட்டியல் இடத்துக்கு யாரை நியமிப்பது என்புது

06

**நீதிமன்ற அவமதிப்பு வழக்கு**

## ஹிருணிகாவுக்கு எதிரான மனு ஜூன் 14 விசாரணை



நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம்

06






# நகர்வலம்



# சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன

சட்டவிரோதமாக இயங்கும் முகவர் நிறுவனங்கள் மற்றும் சட்ட விரோதமான முறையில் ஆட்கடத் தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டம் அமுல்படுத் தப்படுமென பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் (ஓய்வுபெற்ற) ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித் தார்.

இலங்கையின் ஓய்வுபெற்ற படைவீரர்கள் பலர், கூலிப் படை வீரர்களாக ரஷ்ய உக்ரைன் யுத்த முனைக்கு சட்டவிரோதமாக அனுப்பி வைக்கப்பட்டமை தமக்கு தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த அவர், இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் சிக்கிக்கொள்ள வேண்டாமெனவும் இலங்கை படைவீரர்களை கேட் டுக்கொண்டார்.



இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையி லேயே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது, பயங்கர வாதத்துக்கு எதிரான 30 வருடகால யுத்த நடவடிக்கையின் போது நாட்டை பாதுகாப்பதற்கு தம்மை அர்ப்பணித்து சேவை யாற்றி ஓய்வுபெற்ற எமது படை வீரர்கள் பலர், சில சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முக வர்களின் மூலம் கூலிப்படை வீரர் கள் குழு உறுப்பினர்க ளாக ரஷ்யா உக்ரைன் யுத்த முனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தாக பாதுகாப்பு அமைச் சுக்கு தெரியவந்துள் ளது. அத்துடன் அந்த யுத்த முனையில் எமது படைவீரர்கள் பலர் உயி ரிழந்துள்ளதுடன், காய மடைந்துள்ளமையும் எமக்கு தெரியவந்துள்ளது.

வெளிநாட்டு இராணுவத்தில் சேர வாய்ப்பு, சிறந்த சம்பளம், சில நாடுகளில் குடியுரிமை வசதி மற்றும் ஏனைய சலுகைகளை வழங்குவதாகக் கூறி ஆட்கடத்தல் காரர்களால் இவர்கள் ஏமாற்றப் பட்டு, கூலிப்படை வீரர்களாக இப்படைவீரர்கள் ரஷ்யஉக்ரைன் யுத்த முனைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளனர்.

இலங்கை படையில் மிகவும் கௌரவமாக பணியாற்றி ஓய்வு பெற்ற எமது படைவீரர்கள், வெளி நாடுகளில் கூலிப்படை வீரர்களாக செயற்படுவது மிகவும் கவலைக்கு ரியதாகும்.

இந்நிலையில் ரஷ்ய உக்ரைன் யுத்த முனையிலுள்ள எமது படை வீரர்கள் மற்றும் அதில் உயிரிழந் தோர் தொடர்பான உண்மையான தகவல்களை பெற்றுக்கொள்வதற் காக பாதுகாப்பு அமைச்சும் வெளி விவகார அமைச்சும் பாரிய முயற்சி எடுத்துள்ளது என்றார்.

# வெளிநாட்டு கூலிப்படைகளில் சிக்கி ஆபத்தில் மாட்ட வேண்டாம்

## பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா



வெளிநா ட்டிலுள்ள கூலிப்படைகளில் இலங்கை படைவீரர் கள் சிலர் இணைவதாக அண்மைக்கால தக வல்கள் மூலம் தமக்கு தெரியவந்துள்ளது டன், இந்த ஆபத்தான நிலைமைக்கு ஆளாக வேண்டாமென்று தமது படைவீரர்களை கேட் டுக்கொள்வதாக பாதுகாப்பு படை களின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த நாட்டின் படைவீரர்களாகிய நாம், எமது தாய்நாட்டின் மீதான ஆழ்ந்த பற்றுமிக்க உணர்வு மற்றும் மரியாதைக்காக பணியாற்ற கட் டுப்பட்டுள்ளோம். இந்நிலையில் பயங்கர வாத அமைப்பை தோற் கடித்து வெற்றிமிக்க இராணுவ வீரர்களாக விளங்குகின்ற நாம், எமது தொழிலின் மூலம் நேர்மை மற்றும் மரியா தையை நிலை நாட்ட வேண்டும்.

எமது சேவைக்காலத் தில் எமது நாட்டுக்காக செய்த தியா கங்களை மறந்துவிடக் கூடாது. நாம் பல கஷ்டங்களை சந்தித்துள் ளோம். எமது வீரமானது தனிப்பட்ட இலாபத்துக்காக விற்கப்படும் ஒன் றல்ல. எமது தாய்நாட்டின் பாது காப்பு மற்றும் முன்னேற்றத்துக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பா கும். ஆகையால் படைவீரர்களாகிய நீங்கள் உங்களது மரியாதை மற்றும் கண்ணியத்தை நிலை நாட்ட வேண்டும் என்று தனது அறிக்கை யில் மேலும் தெரிவித்துள்ளார்.

# தர்கா நகர் ஆலிம் ஸாஹிப் அப்பா தர்காவில் கொடியேற்றம்



(பேருவளை விசேட நிருபர்)

தர்கா நகர் ஆலிம் ஸாஹிப் அப்பா தர்காவில் 162 வது வருட மஷாயிகுமார் கந்தூரி கொடி யேற்ற வைபவம் இன்று 9ஆம் திகதி வியாழக் கிழமை அஸர் தொழுகையின் பின்னர் இடம் பெறவுள்ளது.

குத்புஸ்ஸமான் நாயகம் அஷ்செய்ஹ் ஹஸன் இப்னு உதுமானுல் மஹ்தூமி (ரலி) ஆலிம் ஸாஹிப் அப்பா அவர்கள் அடங்கி யுள்ள இந்த தர்காவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அன்று இரவு முதல் தொடர்ந்து 8 இரவுகள் இஷாத் தொழுகையின் பின்னர் மஷாயிகுமார் ராத்தீப் நடைபெறும். எதிர்வ ரும் 18ம் திகதி சனி பின்நேரம் ஞாயிறு இரவு மஷாயிகுமார் ராத்தீபும் இரவு கந்தூரியும் நள் ளிரவு ஸியாரத் நிகழ்வும் இடம் பெறுவதோடு 19ஆம் திகதி பகல் பெரிய கந்தூரியுடன் நிறைவு பெறும்.

செய்யது செய்கு ஜிப்ரி பின் செய்யது முஹம் மத் ஜிப்ரி மௌலானா செய்யது அஸ்லம் ஜிப்ரி பின் செய்யது முஹம்மது அப்துர் ரஹ்மான் ஜிப்ரி மௌலானா ஆகியோர் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை தர்காவின் பரிபா லன கமிட்டி மேற்கொண்டுள்ளது.

# துபாயில் இனிய நந்தவனம் அறிமுகம்





தமிழ் நாட்டின் திருச் சியிலிருந்து கடந்த 27 ஆண்டுகளாக வெளிவரும் இனிய நந்தவனம் மாத சஞ்சி கையின், துபாய் மக் களுக்கான அறிமுக விழா, துபாய் அன்ன பூரணா உணவகத்தில் (06) வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஹாசிம் உமர் பவுண்டேசன் ஏற் பாட்டில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபன ஆலோசகரும் இலக்கியப் புரவலருமான ஹாசிம் உமர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முனைவர் மு.ரா. ரோகிணி, பத்திரிகையாளர் முதுவை கிதாயத், துபாய் தொழிலதி பர் அப்துல் வஜீத், உளநல ஆலோசகர் ஃபஜிலா ஆசாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இனிய நந் தவனம் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்று நிகழ்வை ஒழுங்குபடுத்தி னார். துபாயில் கற்றல் கல்வி மேலாண்மை மையம் மூலமாக தமிழ் குழந்தைக ளுக்கு தமிழ் மொழி மற்றும் தமிழ் பண்பாடுகளைக் கற் றுத்தரும் முனைவர் மு.ரா ரோகிணிக்கு "மொழிக்காவ லர் என்ற விருதினை ஹாசிம் உமர் வழங்கி கௌரவித்தார். துபாய் வாழ் தமிழ் ஆர்வலர் கள். எழுத்தாளர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஸ்ரீலங்கன் விமான சேவை மறுசீரமைப்பு: சிறந்த குழுவுடன் இணைந்தே முன்னெடுப்பு

## 6,000 ஊழியரின் தொழிலை பாதுகாக்க இதுவே வழி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மறுசீரமைப்பின் மூலம் சிறந்த முதலீட்டுக் குழுவொன்றுடன் இணைந்தே ஸ்ரீலங்கன் விமான சேவையை முறையாக முன்னெ டுக்க முடியுமென, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலங்கை மட்டுமன்றி உலகில் செல்வந்த நாடுகளில் கூட, விமான சேவைகள் நட்டத்திலேயே இயங்குவ தாக சுட்டிக்காட்டிய அமைச்சர், சில நாடுகள் அந்த நிறுவனங்களுக்கு பில் லியன் கணக்கில் நிதி வழங்குவதாக வும் இலங்கையால் அவ்வாறு செய்ய முடியாது என்றும் தெரிவித்தார்.

விமான சேவை ஊழியர்கள் 470 பேர், ஒரே தடவையில் தமது பதவியை இராஜினாமா செய்ததா லேயே 791 பேரை புதிதாக இணைக்க நேர்ந்ததென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று பிரதமருக்கான கேள்வி நேரத்தின் போது, எதிர்க்கட்சி எம்பி ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்குப் பிரதமரின் சார்பில் பதி லளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த வருடத்திலேயே அதிகமான ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளதாக ஹேஷா விதானகே எம்பி தமது கேள் வியில் சுட்டிக்காட்டினார்.

பெரும் தொகையானோர் தமது பதவியை இராஜினாமா செய்யும் போது அந்த வெற்றிடத்துக்காக ஆட் சேர்ப்பு செய்வது தவறா? என, நான் அவரிடம் கேட்க விரும் புகிறேன்.

உலகில் எம்மை விட செல்வந்த நாடுகள், குறிப்பாக இந்தியா போன்ற நாடுகளிலும் விமான சேவைகள் நட் டத்திலேயே இயங்கு கின்றன. இந்திய எயார் லைன்சுக்கு என்ன நடந் தது? அதுவும் நட்டத்தி லேயே இயங்குகிறது. சுவிஸ் எயார் தற்போது சேவையில் உள்ளதா? அதுவும் கிடையாது.

எமிரேட்ஸ் போன்ற விமான சேவைக்கு அந்த நாடுகள் 02 அல்லது 03 பில்லியன் அமெரிக்க டொலர் களை தொடர்ச்சியாக வழங்குகின் றன. இலங்கை போன்ற நாடுகளுக்கு அவ்வாறு செய்ய முடியாது. அதனால் எமது நாடு போன்ற சிறு அளவிலான விமான சேவைகளை நடத்தும் நிறு வனங்கள் பிரச்சினைகளை எதிர் நோக்கியே ஆக வேண்டும்.

விமானம் கொள்வனவு செய்வ தற்கும் எம்மிடம் நிதி கிடையாது. இதற்காக முதலீடு செய்யும் நிலை யிலுமில்லை. குத்தகை அடிப்படை யிலேயே விமானங்களை பெற்றுக் கொள்கிறோம். ஒரு விமானம் கூட எமக்கு சொந்தமானதாக இல்லை. அனைத்து விமானங்களும் லீசிங் முறையில் பெற்றுக் கொள்ளப்பட் டுள்ளன. அவற்றுக்கு லீசிங் வழங்கிய பின்னர் எத்தகைய நிதியும் எமக்கு மிஞ்சாது.

அண்மைக் காலங்களில் விமான சேவை தொடர்பில் பல தொழிற்சங்க நெருக்கடிகளையும் எதிர்நோக்க நேர்ந் தது. இதுவும் நட்டத்திற்கு காரணமா கிறது. இதனால்தான், மறுசீரமைப்பு அவசியமாக உள்ளது.

# சர்வதேச கண்காணிப்பு மட்டுமே தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நல்லிணக்க ஆணைக்குழு அமைக் கப்படுமானால், சர்வதேச கண்கா ணிப்பு மிக மிக அவசியமென, தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறான சர்வதேச கண்கா ணிப்பு இருந்தால் மட்டுமே,நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை பாதிக் கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் உரு வாகும் என்றும் அவர் சபையில் தெரி வித்தார். பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற இராஜதந்திர சிறப்பு ரிமை சட்டத்தின் கீழ் 2348/48ஆம் இலக்க வர்த்தமானியில் பிர சுரிக்கப்பட்ட கட்ட ளைகள்,பெற்றோலிய உற்பத்திப்பொருட் கள் (விசேட ஏற்பாடு கள்) சட்டத்தின் கீழ் 2340/02 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்த லில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



விவாதத்தில் தொடர்ந்தும் உரை யாற்றிய அவர்: கடந்த காலங்களில் அமைக் கப்பட்ட. நல்லிணக்க ஆணைக்குழுக்கள் பயனற்றுப் போயின. மீண்டும் புதிதாக நல் லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவ தற்கு நடவடிக்கை எடுக் கப்படுகிறது.

அதனை நாம் முற்று முழுதாக எதிர்க்கிறோம்.

நாட்டின் தற்போதைய நிலையில் நல்லிணக்க ஆணைக்குழு அமைக் கப்படுவது தேர்தலை இலக்காகக் கொண்ட செயற்பாடா என்ற சந்தேகம் எழுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைக்க வெளிவிவகார அமைச்சர் எடுக்கும் முயற்சி, சாத்தியமானதாக அமையுமா? என்பது ஒருபுறமிருக்க அதனை நாம் எவ்விதத்திலும் ஏற் றுக்கொள்ளப் போவதில்லை.

யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பே இது, தொடர்பான விசாரணைகள் நடத் துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சர்வதேச கண்காணிப்போடு இந்த விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பதை நாம் முன்பிருந்தே வலியு றுத்தி வருகிறோம்.

# ஐ.தே. கவின் JSS சங்கத்தின் தேர்தலை நடத்த அனுமதி

## மாவட்ட நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவின் தலைமையில், தலைவர் அகில விராஜ் காரியவசத்தின் கீழ் இயங்கும் ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதான தொழிற்சங்கமான தேசிய ஊழியர் சங்கத்தின் உத் தியோகபூர்வ தேர்தலை நடத்த, நுகேகொட மாவட்ட நீதிமன்றம் நேற்று (08) அனுமதி வழங்கியுள் ளது.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் ஐக்கிய தேசியக் கட் சியின் தேசிய தொழிலாளர் சங்கத் தின் உத்தியோகபூர்வ தேர்தலுக்கு எதிராக, நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் சிலர் இடைக்கால தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

இந்த இடைக்கால தடை உத் தரவை நீக்கி அதிகாரபூர்வமாக தேர்தலை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. கூடிய விரைவில் தேர்தல் நடத்தப்படு மென அதன் தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

# கொரிய தூதுவருடன் கல்வி அமைச்சர் சந்திப்பு



இலங்கை, கொரியாவுக்கிடையி லான தொழில்சார் மற்றும் பயிற்சி வாய்ப்புகளுடன் கல்வி ஒத்து ழைப்பை மேம்படுத்துவது தொடர் பாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அண்மையில் இலங் கைக்கான கொரிய தூதுவர் திருமதி மியோன் லீக்குடன் கலந்துரையாடி னார். கல்வி அமைச்சில் இக்கலந்து ரையாடல் நடைபெற்றது.

கொரிய அரசாங்கம் தொழில்சார் பயிற்சி மற்றும் கல்வி புலமைப் பரிசில்களை வழங்கியமைக் காக, நன்றி தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, எதிர்காலத் தில் சிறந்த கொரிய தொழில்சார் பயிற்சி வாய்ப்புகளுக்கு விண்ணப் பிக்கும் வகையில் இலங்கையில் பயிற்சி வகுப்புகளை அமைப்பதில் கவனம் செலுத்துவதாகவும் தெரி வித்தார்.இதற்காக, எதிர்காலத்தில் கொரியாவின் ஆதரவை எதிர்பார்ப் பதாகவும் அமைச்சர் இங்கு தெரி வித்தார்.

# ஸ்ரீலங்கன் விமான சேவைகள் சுமை ஏற்படாதவாறு முன்னெடுப்பு

## சபையில் பிரதமர் தினேஷ் குணவர்தன

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

ஸ்ரீலங்கன் விமான சேவை மற்றும் விமான நிலையத்தை வரி செலுத்தும் மக்களுக்கு சுமை இல்லாதவாறு முன்னெடுப்பதற்குத் தேவையான, பல்வேறு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி எம்பி ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று பிரதமரின் கேள்விக்கான வேளையிலேயே, ஹேஷா விதானகே எம்பி இக்கேள்வியை எழுப்பினார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; பயிற்சிகளுக்காக மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்தல், மிக அத்தியாவசியமான ஆட்சேர்ப்பை மட்டும் மேற்கொள்ளல், அனாவசிய கொள்வனவுகளை மட்டுப்படுத்தல், சம்பளத் திருத்தம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகியவற்றை நிறுத்துதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அதேவேளை, ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அரசாங்க வங்கிகள் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கவுள்ள கடன் தொடர்பில், தெளிவுபடுத்துமாறு ஹேஷா விதானகே எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த பிரதமர்:

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனமானது 2024 மார்ச் 31 க்கு வரையான காலப்பகுதியில் அரச வங்கிகளுக்கு 385.12 மில்லியன் டொலர் வழங்கப்பட வேண்டியுள்ளது

இலங்கை வங்கிக்கு 217.42 மில்லியன் டொலரும் மக்கள் வங்கிக்கு 167. 71 மில்லியன் டொலரும் இவ்வாறு கடனாக வழங்க வேண்டியுள்ளது. எனினும் 2024 மார்ச் 31 வரை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு கடன் வழங்க வேண்டியதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். வலி வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பிரவேசிக்க அனுமதி

## பாதைகளை திறக்க வடக்கு ஆளுநர் நடவடிக்கை

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்.தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள், பொதுமக்கள் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிக்குள், பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகளை திறக்குமாறும், இணைந்த வீதிகளை பயன்படுத்த அனுமதிக்குமாறும் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் பாதுகாப்பு பிரிவினரிடம் கோரினார். இதையடுத்து ஒட்டகப்புலம் பகுதிக்கு செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த ஆளுநர் விடுவிக்கப்பட்ட காணிகளை பார்வையிட்டு உரிமையாளர்களுடனும் கலந்துரையாடினார். வசாவிளான் கிழக்கு (J/244), வசாவிளான் மேற்கு (J/245), பலாலி வடக்கு (J/254), பலாலி கிழக்கு (J/253), பலாலி தெற்கு (J/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்த்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

06

# பாஸ்மதி அரிசிக்கு பதிலாக 02 மாற்று நெல் வகைகள்

## நெல் ஆய்வு நிறுவனம் கண்டுபிடிப்பு

பாஸ்மதி அரிசிக்கு பதிலாக இரண்டு மாற்று நெல் வகைகளை அறிமுகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வெற்றியடைந்துள் ளதாக, பதலகொட நெல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உற்பத்தி பயிர் சிபாரிசு குழுவின் பரிந்துரைகளின் கீழ், இந்த பாசுமதி மாற்று நெல் ரகங்களை நாட்டில் உற்பத்தி செய்வதற்காக இன்னும் சில மாதங்களில் விடுவிக்க முடியுமென நெல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. மொத்த அரிசி தேவையும் நாட்டின் உற்பத்தியிலிருந்து பெறப்பட்ட போதிலும், சுற்றுலாத் துறை மற்றும் ஹோட்டல்களுக்குத் தேவையான பாசுமதி இந்தியா மற்றும் பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பாசுமதி அரிசிக்காக செலவிடப்படும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் வகையில், நாட்டில் பாசுமதி அரிசிக்கான உற்பத்தி நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த வகை அரிசியும் முக்கியத்துவம் பெற்றிருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொவிட் தடுப்பூசிகளை திரும்ப பெற அஸ்ட்ரா செனிகா கம்பனி தீர்மானம்

பக்கவிளைவுகள் ஏற்படும் ஆபத்துள்ளமையை ஏற்றுக் கொண்டுள்ளதால், உலகளவில் தமது கொரோனா தொற்றுக்கான தடுப்பூசியைத் திரும்பப் பெற அஸ்ட்ராசெனிகா நிறுவனம் தீர்மானித்துள்ளது.

சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து கொரோனா தடுப்பூசியை பல்வேறு நாடுகள் கண்டுபிடித்தன. இதில், பிரித்தானியாவைச் சேர்ந்த அஸ்ட்ராசெனிகா நிறுவனம் மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் இணைந்து தடுப்பூசி ஒன்றை உருவாக்கின. இந்த தடுப்பூசி இந்தியாவில் கொவிஷீல்ட் என்ற பெயரில் விநியோகிக்கப்பட்டது. பல நாடுகளில் கொரோனா காலத்தில் இந்த தடுப்பூசியே பரவலாக செலுத்தப்பட்டன. இதற்கிடையே, அஸ்ட்ராசெனிகா தடுப்பூசியால் உயிரிழப்புகளும் பக்க விளைவுகளும் ஏற்படுவதாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.



06

# பேருவளையில் திண்ம கழிவகற்றல் ஒழுங்குபடுத்தப்படுவது அவசியம்

## பிரதமர் உடனடி கவனம் செலுத்த வேண்டும்



பேருவளை நகரசபை பகுதியில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை அகற்றுவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினையில், உடனடியாக கவனம் செலுத்தி தீர்வை பெற்றுத்தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நேற்று (08) பாராளுமன்றத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையிலும், நாட்டின் பிரதமர் என்ற வகையிலும், பேருவளை நகர சபைக்குட்பட்ட மக்கள் எதிர்நோக்கும் குப்பை மேடு மற்றும் அதனோடிணைந்த மிகவும் சிக்கலான சூழ்நிலைக்கு விரைவான தீர்வைக் காண்பதற்கு பிரதமர் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

“பேருவளை நகர சபைக் குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகள் பல வருட காலமாக பேருவளை, மருதானை, வத்திமிராஜபுர கிராமத்திலுள்ள காணியில் கொட்டப்பட்டு வருகின்றன . இதனால், அப்பகுதியில் வாழும் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. இக்கிராமத்தை அண்மித்துள்ள மொரகல்ல சுற்றுலாப் பகுதியிலும் ஈக்கள் பெருக்கெடுத்து துர்நாற்றம் வீசுகிறது.

06

metropolitan

**மெட்ரோபொலிட்டன் இன்ஜினியரிங்**

வெல்லம்பிட்டிய, விஜயவிமலரத்ன வீதி, 100G-A/1 என்ற முகவரியிலிருந்து முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஜெனரேற்றர் சேவைப் பிரிவு, ஜெனரேற்றர் திட்டங்கள் மற்றும் நிறுவுதல் பிரிவு, ஏசி பராமரிப்பு மற்றும் சேவைப் பிரிவு, களஞ்சியசாலைகள் மற்றும் குதங்கள் ஆகியனவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகள் பேலியகொட, நீர்கொழும்பு வீதி, 81/7 என்ற முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதென எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றோம்.

மெட்ரோபொலிட்டன் டெக்னோலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்

பொறியியல் உடனடித் தொடர்பு: 011 4705000



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் சித்திரை மாதம் 26ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 30

### குறள் தரும் சிந்தனை



அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங்காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும்.

# உஷ்ணத்தின் தாக்கங்களை தவிர்ப்பது மிக அவசியம்

நாட்டில் கடந்த சில வாரங்களாக அதிகரித்த உஷ்ணகாலநிலை நிலவி வருகிறது. இக்காலநிலையின் தாக்கம் எல்லா மட்ட மக்களாலும் உணரப்படுகிறது. கடும் உஷ்ணம் வாட்டி வதைப்பதாக மக்களே சொல்லும் அளவுக்கு நிலமை காணப்படுகிறது.

இந்த உஷ்ண காலநிலை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. மேலும் தற்போதைய கடும் உஷ்ண காலநிலையின் விளைவாக நீர்த்தேக்கங்களிலும் குளங்களிலும் தண்ணீர் மட்டம் வேகமாகக் குறைவடைந்து வருகிறது. அதன் விளைவாக நீரின் பாவனையும் அதிகரித்துள்ளது.

இவை இவ்வாறிருக்க, இந்த கடும் உஷ்ண காலநிலை இலங்கை மாத்திரமல்லாமல் உலகின் பல நாடுகளிலும் உணரப்படுகிறது. இந்த வெப்ப நிலை அதிகரிப்புக்கு காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமே பிரதான காரணம் என்று சுற்றுச்சூழல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கைத்தொழில் புரட்சியைச் தொடர்ந்து ஏற்பட்டுவரும் கைத்தொழில்துறை முன்னேற்றங்களின் பின்புலத்தில் காலநிலை மாற்றத்திற்கு அதிக பங்களிப்பு நல்கப்படுகிறது. அதன் பிரதிபலனாகவே தற்போதைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான சூழலில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அதிர்ச்சிகர செய்தியான்றை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது. தற்போதைய உஷ்ண காலநிலையினால் கடந்த ஒரு வார காலத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலை விடுதியில் நான்கு முதல் ஐந்து மரணங்கள் பதிவாகியுள்ளன என்று வைத்தியசாலையின் பொதுவைத்திய நிபுணர் த. பேரானந்தராஜா தெரிவித்திருக்கிறார்.

யாழ். குடாநாட்டில் நிலவி வரும் கடும் உஷ்ணத்தினால் ஏற்பட்ட சூரிய வெப்ப அதிர்ச்சியே இந்த மரணங்களுக்கு காரணமாக சுட்டிக்காட்டப்பட்டாலும் கூட இதயநோய், சிறுநீரகப் பாதிப்பு, குருதிக்குழாய் பாதிப்பு போன்ற நாட்பட்ட நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு இதன் அச்சுறுத்தல் மிக அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

தற்போது யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் கடும் உஷ்ணம் நிலவுகிறது. இந்த சூழலில் கடும் உஷ்ணத்தினால் மரணங்கள் ஏற்பட்டிருப்பது குறித்த செய்தி வெளியாகி இருப்பது பல்வேறு மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றுள்ளது.

பொதுவாக காலநிலை மாற்றத்தின் விளைவாக புவிவெப்பநிலையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. ஒரு மனிதனின் உடல் குறிப்பிட்ட அளவு வெப்பத்தை தாங்கக் கூடியதாகும். அந்த அளவை விடவும் வெப்பநிலை தாண்டிச் செல்லும் போது உடலில் உபாதைகள் ஏற்படலாம். குறிப்பாக அதிக வியர்வை, வியர்க்குருக்கள் போன்றன வெளிப்படலாம். உடலில் வியர்வை அதிகரிக்கும் போது உடலில் நீரிழப்பு அதிகரிக்கும். அதற்கு ஏற்ப நீரைப் பருகுவது இன்றியமையாததாகும். இருந்த போதிலும் நீர் பருகுவதன் முக்கியத்துவத்தையும் உடல் இழக்கும் நீரை ஈடுசெய்வதன் அவசியத்தையும் அநேகர் உணராதுள்ளனர். ஆனால் கடும் உஷ்ணம் காரணமாக சில சமயங்களில் சிறுநீரகம், இதயம், சுவாசப்பை போன்றவை கூட செயலிழக்கலாம். அத்தோடு குருதிச் சிறுதட்டுக்கள் குறைவடைந்து அதன் விளைவான உபாதைகளும் உடலில் ஏற்படலாம்.

உஷ்ண காலத்தில் அதிக வியர்வை ஏற்பட்டு உடலில் நீரிழப்பு ஏற்படுவதன் விளைவாக திடீர் மயக்கம் கூட ஏற்படலாம். சில சமயம் மூளையிலும் செயலிழப்பு ஏற்படலாம். அவை சூரிய வெப்ப அதிர்ச்சிக்கு மூலகாரணமாக அமைகின்றன. இவற்றை மருத்துவ நிபுணர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த கடும் உஷ்ண காலநிலை முதியவர்களுக்கும் நாட்பட்ட நோயாளர்களுக்கும் சிறு குழந்தைகளுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். அதற்காக வளர்ந்தவர்களுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தாது என்றில்லை.

அதனால் கடும் உஷ்ணம் நிலவும் தற்போதைய சூழலில் ஒவ்வொருவரும் தினமும் போதியளவில் நீரைப் பருகவும், நிழலில் போதியளவில் ஓய்வு எடுத்துக் கொள்ளவும் தவறக்கூடாது. குறிப்பாக கடும் வெப்பகாலநிலை நிலவும் போது வயல் உள்ளிட்ட திறந்தவெளிகளில் தொழில்களில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் தற்போதைய சூழலில் நீராகாரங்களை அடிக்கடி பருகுவதோடு முகத்தையும் கண் புருவங்களையும் அடிக்கடி தண்ணீரால் கழுவிக் கொள்ளவும் வேண்டும். அதன் ஊடாக உடலில் உஷ்ணத்தின் அளவு அதிகரிப்பதைப் பேணிக் கொள்ளக் கூடியதமாக இருக்கும்.

அதன் ஊடாக சூரிய வெப்ப அதிர்ச்சிக்கு முகம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆகவே தற்போதைய அதிக உஷ்ண காலநிலையினால் ஏற்படக்கூடிய உடல் உபாதைகளைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும் அறிவுரைகளும் பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# அகில இலங்கை தமிழ் மொழித் தினம் - 2024; புதிய விதிமுறைகளுடன் இம்முறை போட்டிகள்

கல்வியமைச்சின் தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் பிரிவின் தமிழ்மொழி அலகினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டிகள் இம்முறை புதிய விதிமுறைகளையும் இணைத்துக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ளன.

நோன்புகால விடுமுறை, முன்னோடிப் பரீட்சைகளின் கால குறிக்கீடு, சாதாரணதரப் பரீட்சையின் ஆரம்பம் முதலியவற்றைக் கருத்திற் கொண்டு பாடசாலை மட்ட மற்றும் கோட்ட மட்டப் போட்டிகளை விரைவாக முன்னெடுக்குமாறு மாகாண தமிழ்மொழி பிரிவினூடாக வலயக் கல்வி தமிழ்மொழித் தினப் பிரிவுகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டிகளுக்கான வலய மட்டத்தை ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னரும், மாவட்ட மட்டத்தை ஜுலை 15 இற்கு முன்னரும் நடத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் எழுத்தாக்கம் தவிர்ந்த மாகாணப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 2024.07.25 இற்கு முன்னர் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், மாகாணப் போட்டிகள் யாவும் 2024.08.10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் கிழக்கு மாகாணத்தால் நடத்தப்படவுள்ள மாவட்ட மற்றும் மாகாண நிலை ஒருங்கிணைந்த எழுத்தாக்கப் போட்டிகள் 2024.06.29 அன்று மட்டக்களப்பு, திருகோணமலை,



அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளன.

கல்வியமைச்சினால் 2019 தொடக்கம் 2023 ஆம் ஆண்டுகள் வரை வரையறுக்கப்பட்டு வெளியிடப்பட்ட அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளுக்கான பிரதான சுற்று நிருபம் (35/2018) 2025 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக கல்வியமைச்சின் தமிழ் மொழி அலகினால் 'தமிழ் மொழித் தினம்2024' என்ற சுற்றுநிருப இணைப்பொன்று வெளியாகியுள்ளது.

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள 50 போட்டிகளில் 25 போட்டிகளுக்கு ஒரு பாடசாலை பங்குபற்ற முடியும். ஆரம்பப் பாடசாலைகள் தவிர்ந்த சகல பாடசாலைகளும் போட்டி இலக்கம் 15 அதாவது தமிழறிவு வினாவிடை எழுத்துப் போட்டியில் கட்டாயம் பங்கேற்க வேண்டும்.

பேச்சு,பாவோதல், இலக்கிய விமர்சனம், இசையும் அசையும், இசை_ தனி, இசை_ குழு, நடனம்_ தனி, நடனம்_ குழு 1, திறந்த போட்டிகளான நாட்டிய நாடகம், இலக்கிய நாடகம், வில்லுப் பாட்டு, முஸ்லிம் நிகழ்ச்சி என்பவற்றுக்கான விபரங்கள் புதிய இணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

நாட்டுக் கூத்துக்கலையினை வளர்த்தெடுக்கும் நோக்கில் கிழக்கு மாகாண தமிழ்மொழிப் பிரிவினால் இப்போட்டி குறித்த மாகாணத்திற்கு மாத்திரம் நடத்தப்படுகின்றமை விஷேட அம்சமாகும். கூத்து, முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கான எழுத்துப் பிரதிகள் பாடசாலை அதிபரினால் உறுதி செய்யப்பட்டு போட்டியின் போது நடுவர்களிடம் வழங்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டிய நாடகத்தில் எடுத்துக் கொள்ளப்படும் இலக்கிய பகுதிகளின் பாடல் வரிகளை அப்படியே பயன்படுத்த முடியாது. முக்கியத்துவம் கருதி சில வற்றை பயன்படுத்தலாம். நாட்டிய நாடகத்திற்கான பக்கவாத்தியங்கள் பாடசாலை மாணவர் அல்லது ஆசிரியரால் பயன்படுத்தப்பட வேண்டும். வேறு பாடசாலை மாணவர், ஆசிரியர்களையும் பயன்படுத்தலாம். வெளியார்களைப் பயன்படுத்த முடியாது. அதேவேளை பாடசாலைகளில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நடுவர்களாக பயன்படுத்த முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு அதாவது தற்போது க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் திறந்த போட்டிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும் என விஷேட அறிவுறுத்தல் தலைப்பின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டுக்கான அகில இலங்கை தமிழ் மொழித் தின தேசிய மட்டப் போட்டிகளை ஒக்டோபர் 12,13,19.20 ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது

மாணவர் திறமைகளை இனங்கண்டு, அதனை அரங்கேற்றி அழகுபார்க்கும் இவ்வாறான போட்டிகளில் திறமையான தெரிவுகள் இடம்பெற சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அப்போதே இப் போட்டிகள் அதன் இலக்குகளை அடைய முடியும் என்று வலியுறுத்தப்படுகின்றது.



ஜெஸ்மி எம்.மூஸா
(பெரியநீலாவணை
தினகரன் நிருபர்)

# சி.வி.வேலுப்பிள்ளை எழுதிய நூல்கள் மீள்பதிப்பாக்கம் செய்யப்பட வேண்டும்

'எல்லைப்புறம்' என்ற நாவல் மலையக இலக்கிய வரலாற்றின் முன்னோடியான சி. வி. வேலுப்பிள்ளை அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, பொன். கிருஷ்ணசாமியினால் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இது கலை ஒளி முத்தையா பிள்ளை நினைவுக்குழுவினால் கடந்த ஜனவரி மாதம் 2024 இல் சென்னையில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் உள்ள சிறப்பு என்னவென்றால், இந்நாவலை சி. வி. வேலுப்பிள்ளை அவர்களே தன் கைப்பட, இலக்கிய ஆளுமை அகிலனின் முன்னுரையோடு பல ஆண்டுகளின் முன்னே மு. நித்தியானந்தனுக்கு அனுப்பி வைத்தமைதான். இருந்தாலும் உள்நாட்டு யுத்தம், இடப்பெயர்வு, புலம்பெயர் வாழ்வின் நடைமுறைச் சிக்கல்கள் எனப் பலதும் அலைக்கழித்ததில் இந்நாவல் எங்கெல்லாமோ அலைந்து, பல ஆண்டுகளாகப் பதிப்பாக்கம் செய்யப்பட முடியாத ஒரு நிலையில் இருந்தது. பல ஆண்டுகளின் பின்னர் நித்தியானந்தன் அவர்கள் இதனைத் தன் பெருமுயற்சியினால் பதிப்பாக்கம் செய்திருக்கிறார்.

நித்தியானந்தன் மிகுந்த முனைப்போடு, பல சிக்கல்களைக் கடந்து இந்நாவலை வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

ஆங்கிலத்தில் ' borderland' என்ற பெயரில் சி. வி. வேலுப்பிள்ளையால் இந்நாவல் எழுதப்பட்டிருந்தாலும், இதன் தமிழ் மொழிபெயர்ப்பான இந்நூலே ஏறத்தாழ 20 வருடங்களின் பின்னர் வெளிவந்திருக்கிறது. இதன் ஆங்கில மூலப்பிரதி வெளிவரவில்லை என்பது கவலைக்குரியது.

சி. வி. வேலுப்பிள்ளை ( 1914 1984) மலையகத்தின் இலக்கிய முன்னோடி மட்டுமல்ல, ஆசிரியர், அரசியல்வாதி,



தொழிற்சங்கவாதி, கவிஞர், பத்திரிகை ஆசிரியர் எனப் பன்முக ஆளுமையாளராகத் திகழ்ந்தவர். இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினராக 1947 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டவர்.

மலையகத்தில் ஒரு புகழ் பூத்த குடும்பத்தில் பிறந்து, கொழும்பில் நாலந்தா கல்லூரியில் கல்வி கற்றுத் தேறியிருந்தாலும் தான் பிறந்த இடத்து மலையக மக்களின், மனித உரிமைகளை இழந்து தவித்த நாடற்ற மக்களின் ஏகோபித்த குரலாக ஒலித்தவர்.

சிவி வேலுப்பிள்ளை அவர்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் ஒரு சேர புலமை பெற்றவராயிருந்தவர். பல நூல்களை ஆங்கிலத்தில் எழுதியிருந்தாலும் மலையக மக்களுடன்தான் அவர் வாழ்ந்திருந்தார், அந்த மக்களைப் பற்றித்தான் எழுதினார். அவர்தான் மலையக இலக்கிய மரபுக்கு வித்திட்டவர் என்பதை

**ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நாவலின் மொழிபெயர்ப்பு (எல்லைப்புறம்)**

மலையகத்தின் மூத்த எழுத்தாளர்களின் ஒருவரான தெளிவத்தை ஜோசப் முன்னர் கூறியிருந்தார். சி. வி. வேலுப்பிள்ளை எழுதிய பல படைப்புகளில் பதினைந்து நூல்கள் மாத்திரமே பிரசுரமாகியிருக்கின்றன.

'எல்லைப்புறம்' ஒரு கைக்கடக்கமான, விறுவிறுப்பு சற்றும் குறையவிடாத ஒரு கதைக்களத்தை எமக்குத் தந்திருக்கிறது.

மிக வீரியமான கதாபாத்திரமான, விபரீத குணங்களையுடைய ஒரு மங்கையின் திருமண வாழ்வின் தோல்வியும், அது சார்ந்த துயரமும், அதைக் கடந்து செல்லும் அவளது துடுக்குத்தனம் நிறைந்த திமிரும் எங்கு போய் முடிகிறது. எதற்காக இத்தனை ஆண்களை அவள் வசீகரிக்கிறாள், என்பதெல்லாம் வாசகர்களை நிச்சயமாகக் கட்டிப் போடும் கதைக்கருதான்.

நாவல் எங்கும் தோய்ந்து போயிருக்கும் 'பாலுமை' சார்ந்த அகவுணர்வுகளோடான எல்லைப்புறம் மட்டுமன்றி மலையகமும் அதனோடு இணைந்தும், இணையாமலும் இருக்கின்ற நிலம் சார்ந்த எல்லைப்புறங்களையும் இந்நாவல் மறைமுகமாக, ஆனால் அழுத்தமாகத் தொட்டுச் செல்கிறது.

மலையகத்தின் எல்லைப்புறங்களில் அமைந்திருக்கும் சிங்களக் கிராமங்களின் வழியாக மலையாகத் தமிழர்களுக்கு ஏற்படும் வலியும் துயரமும் அரசியல், பொருளாதாரம், குடியியல் சார்ந்து ஏற்படுவதை கூறத் தவறாத அதேவேளையில் சிங்களவர், தமிழர் இடையேயான தோழமைகளையும் அதன் பால் செழுமையாக்கப்பட்ட கிராம மக்களின் வாழ்வாதாரங்கள், எல்லைப்புறங்களில் வரண்டு போயிருக்கும் இரு சாரார்களுக்கிடையேயான ஊடாட்டத்தை உயிர்ப்பிக்கும் முயற்சிகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

மலையக இலக்கியத்திற்கு செழுமையும், புதுப்பரிமாணமும் தந்த சி. வியின் இந்நாவல் அவசியம் அனைவராலும் வாசிக்கப்பட வேண்டும். தொடர்ந்தும் அவரது நூல்கள் மீள்பதிப்பாக்கம் செய்யப்பட வேண்டும்.



பூங்கோதை

# காத்தான்குடியில் கண்பார்வை குறைகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஒருவார கால திட்டம்

## மன்னர் சல்மான் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையம் ஏற்பாடு

கண்பார்வையோடு தொடர்பான நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் சவூதி நூர் தன்னார்வத் திட்டத்தை மன்னர் சல்மான் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையம் காத்தான்குடியில் ஏற்பாடு செய்து நடத்தி வருவதாக இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி தெரிவித்துள்ளார்.

கடந்த 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வேலைத்திட்டம் நாளை 10 ஆம் திகதிவரை நடைபெறவிருப்பதோடு இன, மதபேதங்களுக்கு அப்பால் அனைத்து மக்களும் இங்கு மனிதாபிமான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகெங்கிலும் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் துன்பத்தைத் துடைக்கவுமென, இரு புனிதத்தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீஸ் ஆல் ஸுஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சாலமன் ஆல் ஸுஊத் ஆகியோர் தலைமையில் சவூதி அரேபிய அரசு பல்வேறு வகையான மனிதாபிமான சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தில் கண்கள் தொடர்பான நோய்களுக்கு உள்ளாகியுள்ள ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்தல், அவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்குதல், மருந்து மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்குதல், சுகாதார விழிப்புணர்வு வழங்குதல் ஆகிய சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது, கடந்த காலங்களில் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் மன்னர் சல்மான் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையத்தால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் தொடராகும். கடந்த ஆண்டு செப்டம்பர் 06ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், தென்னிலங்கையில் வலஸ்முல்ல மற்றும் கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி ஆகிய பகுதிகளில் இவ்வாறான தன்னார்வத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

உலகெங்கிலும் தேவைப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட சவூதி அரேபிய இராச்சியத்தின் அணுகுமுறையைத் தொடர்வது, மனிதாபிமானமற்ற நோக்கங்கள் எதுவுமின்றி உதவிகளை வழங்குதல் ஆகியன இத்திட்டத்தில் உள்ளன.

நம்பகமான சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல் மற்றும் அவற்றின் ஆலோசனைகளைப் பெறல்,




நிவாரண திட்டங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து சர்வதேச தரங்களையும் பயன்படுத்துதல், இராச்சியத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள எல்லாத் தரப்பினருத்தும் முயற்சிகளை ஒன்றிணைத்தல், உதவிகளில் உயர் தரம் மற்றும் நம்பகத்தன்மை பேணப்படல் ஆகியன இத்திட்டங்களில் உள்ளடங்கியுள்ள அம்சங்களாகும்.





2023, டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில், மையத்தினால் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் பொதுவான புள்ளிவிபரங்களின்படி, உலகின் 98 நாடுகளில் மொத்தமாக 6,532,536,783 அமெரிக்க டொலர் செலவில் 2,673 திட்டங்கள் செயல்படுத்த ப்பட்டுள்ளன. இதில் இல ங்கையில் 17 திட்டங்கள் 14,311,611 அமெரிக்க டொலர்கள் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறுபோக செய்கைக்கு நீர் வழங்கலில் சிக்கல்; குமுழமுனை கமநல நிலையத்தில் ஆராய்வு



**ஓமந்தை விசேட நிருபர்**

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுபோகச் செய்கைக்கான நீர் வழங்கலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக குமுழமுனை கமநல சேவை நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த வருடத்தில் தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் 2,700 ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கழிவு நீரில் சுமார் 1,000 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த வருடத்தில் தீர்மானிக்கப்பட்டதை விட அதிகளவாக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவதால் தற்போது தண்ணிமுறிப்பு குளத்திலுள்ள நீர் போதாமலுள்ளது. தற்போது மழை இல்லாத நிலையில் வெப்பமான கால நிலையும் நிலவி வருகின்றது.

ஆகையால் நீரை விரயமாக்காமல் சிக்கனமாக பயன்படுத்தி நெற்செய்கை நிலங்களுக்கு பாய்ச்சுவதன் மூலமே சிறந்த அறுவடையை பெற்றுக்கொள்ள முடியுமென கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் நெற்செய்கைக்கு தேவையான நீரை விரயமாக்காமல் பயிருக்கு பாய்ச்சுதல், நீரை பகிர்ந்தளிக்கும் முறை, நீரை சேமிக்கும் முறை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது சிறுபோகச் செய்கை பண்ணப்பட்டுள்ள அனைத்து வயல் நிலங்களுக்கும் வழமை போன்று நீரை பாய்ச்சுமாறும் அதற்கு தாமே பொறுப்பென்று இந்தக் கலந்துரையாடலில் விவசாயிகள் கூறினர். முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் சிவபாதசுந்தரம் விகிர்தன், முத்தையன்கட்டு பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் மஞ்சுளா ஜொய்ஸ் குமார், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உமாமகள், கமநல சேவை திணைக்களத்தின் உதவி ஆணையாளர், விவசாயிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தராகிய பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ். வேலணையில் மிதிவெடிகள் மீட்பு

**யாழ். விசேட நிருபர்**

யாழ். வேலணை, சரவணை மேற்கு பிரதேசத்தில் ஐந்து மிதிவெடிகள் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் மீட்கப்பட்டன.

மேற்படி பிரதேசத்திலுள்ள காணியொன்றிலிருந்தே மிதிவெடிகள் மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அக்காணிக்குச் சென்று மிதிவெடிகளை பொலிஸார் அவதானித்துள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பாக குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினருக்கு பொலிஸார் அறிவித்தனர். இதனை தொடர்ந்து இந்த மிதிவெடிகள், நீதிமன்ற அனுமதியுடன் குண்டு செயலிழக்க செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## வடக்கின் உதயம்

# அச்சுவேலி மகிழடி வைரவர் ஆலயத்தில் செந்தமிழ்ச் சொல்லருவி கௌரவிப்பு



**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ். அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள மகிழடி வைரவர் ஆலயத்தில் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மகிழடி வைரவர் ஆலயத்தில் நடைபெற்ற அலங்கார திருவிழா நிறைவின் சப்பரத் திருவிழாவின் போது நேற்று முன்தினம் அவர் திருவிழா உபயகாரர்களாலும் ஆலய தொண்டர் சபையினராலும் கௌரவிக்கப்பட்டார். திருவிழாவின் போது 'வைரவர் வழிபாட்டின் மகத்துவம்' என்ற தலைப்பில் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் ஆன்மிக உரையாற்றியிருந்தார்.

இதன்போது மேற்படி ஆலய பிரதம குரு சிவசிறீ க.ஓம்முருகையா சிவாச்சாரியார், சிவசிறீ பா.சோமசுந்தர குருக்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

# குடும்ப சுகாதாரம்; யாழில் விழிப்புணர்வு செயலமர்வு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ். நல்லூர் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவர்களுக்கு குடும்ப சுகாதாரம் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மகப்பேற்று மற்றும் பெண்ணியல் மருத்துவத்துறையும் சமூக மருத்துவத்துறையும் இணைந்து நடத்தி வரும் இனப்பெருக்க சுகாதாரம் தொடர்பான செயற்றிட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட சமூக சுகாதார உதவியாளர்கள் விழிப்புணர்வு செயலமர்வை நடத்தினர். இதன்போது இனப்பெருக்க சுகாதாரம், இளவயது திருமணம், பால்நிலை வன்முறை மற்றும் குழந்தை பேற்றுக்கு பின்னரான சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக அவர்கள் தெளிவூட்டினர். சர்வதேச மருத்துவ நிறுவனமான ஐ.எம்.எச்.ஓ. நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இந்த விழிப்புணர்வு செயலமர்வு கடந்த ஒன்றரை வருட காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மல்லாகத்தில் மாடறுக்கும் மடுவத்துக்கு சீல் வைப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ். மல்லாகம் பிரதேசத்தில் உரிய அனுமதியின்றி இயங்கி வந்த மாடறுக்கும் மடுவமொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்ற உத்தரவுக்கமைய சீல் வைத்து மூடப்பட்டது. இதேவேளை அம்மடுவத்தின் உரிமையாளர் நீதிமன்றத்தில் முன்னிலையானதை அடுத்து அவரை ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

மல்லாகத்தில் உரிய அனுமதியின்றி இம்மடுவம் இயங்கி வந்தமை தொடர்பாக சுகாதாரப் பிரிவினருக்கு கடந்த திங்கட்கிழமை கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய பொலிஸாருடன் அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று சோதனை நடத்தினர். இதன்போது அம்மடுவத்திலிருந்து மாடொன்று, கன்றுக்குட்டியொன்று, மாடு வெட்ட பயன்படுத்தும் கூரிய ஆயுதங்கள், மாடு கட்டும் கயிறு உள்ளிட்டவற்றை



பொலிஸார் மீட்டனர். இந்நிலையில் மீட்கப்பட்ட சான்றுப்பொருட்களை நீதிமன்றத்தில் பாரப்படுத்திய போது, மாடு மற்றும் கன்றுக்குட்டியை தெல்லிப்பழையிலுள்ள அன்பு இல்லத்தில் வைத்து பராமரிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் மாடுகள் மடுவத்துக்கு கடத்திக் கொண்டு செல்லப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்பட்டவையா? இறைச்சிக்கு வெட்டப்பட்ட மாடுகள் திருடப்பட்டவையா? பசு மாடுகளும் இறைச்சிக்கு வெட்டப்பட்டவையா? ஆகிய கோணங்களில் விரிவான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டது.

# இம்முறை மன்னார் மாவட்டத்தில் 2,875 ஏக்கரில் சிறுபோக செய்கை

**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் 30,038 ஏக்கரில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கட்டுக்கரைக்குளத்து நீர் அளவைக்கொண்டு நடப்பு வருடமாகிய இந்த வருடத்தில் சிறுபோகச் செய்கை 12:1 என்ற விகிதாசார அடிப்படையில் 2,875 ஏக்கரில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

கட்டுக்கரைக்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிலங்குளம் கட்டுக்கரைக்குள விவசாயிகள் கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற போதே, அவர் இதனைக் கூறினார்.

சிறுபோகச் செய்கைக்கு இம்மாதம் 27ஆம் திகதி முதல் நீர் விநியோகிக்கவுள்ளதாகத் தெரிவித்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகள் விதைப்பை மேற்கொள்ள வேண்டுமென்றார்.

மேலும் காப்புறுதி செய்யப்பட வேண்டிய இறுதி திகதியாக ஜூன் 16ஆம் திகதி உள்ளதுடன், அறுவடைக்கான இறுதி திகதியாக ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

ஆகவே மேற்படி தீர்மானத்துக்கமைய சிறுபோகச் செய்கையை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். மன்னார் விவசாயிகள் கிடைக்கும் நீரை உச்சப் பயன்பாட்டில் பயன்படுத்த வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

# மவுஸாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைவு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

வரட்சியான காலநிலையை தொடர்ந்து மவுஸாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால் பண்டைய காலத்தில் கட்டப்பட்ட பாலம், சண்முகநாதர் ஆலயம், இஸ்லாமிய பள்ளிவாசலிருந்த தூபி, பௌத்த விகாரை, அதன் முற்றத்திலிருந்த போதிமரம், கங்கேவத்தை நகரிலிருந்த சித்தி விநாயகர் ஆலயம் என்பன வெளித் தென்பட்டுள்ளன.

நீரில் மறைந்திருந்த இவை தற்போது வெளித் தென்பட்டுள்ளதால், அதிகளவான மக்கள் சென்று அவற்றை பார்வையிட்டு வருகின்றனர்.

மத்திய மலைநாட்டின் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பமான காலநிலை நிலவுகிறது.

மத்திய மலைநாட்டிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் வரட்சியால் வெகுவாக குறைந்துள்ளது. சிற்றாறுகள், ஓடைகள், அருவிகள், ஆறுகளுக்கு நீர்வரத்து குறைவாக உள்ளது.

நீர் வீழ்ச்சிகளும் வரண்டுள்ளது. இதன் காரணமாக நீர் மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படலாமென, நீர்மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக, மவுஸாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட, சுமார் 52 அடிவரை குறைந்துள்ளது.

அதேபோல் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டமும் அதன் கொள்ளளவை விட 47 அடி



குறைந்துள்ளதாக, அவற்றின் பொறியியலாளர்கள் கூறினர்.

இதேவேளை மலைநாட்டில் தொடரும் வரட்சியான காலநிலை காரணமாக சுத்தமான குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

## மலைச்சாரல்

# ஸ்ரீவிக்னேஸ்வரர் ஆலய கும்பாபிஷேக பூஜை



**புசல்லாவை தினகரன் நிருபர்**

மத்திய மாகாண வத்தேகம கல்வி வலய பன்விலை விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீவிக்னேஸ்வரர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி பாடசாலை அதிபர் கே.கோபாலகிருஷ்ணன் தலைமையில் கும்பாபிஷேக பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

பாடசாலையின் பழைய மாணவரும் சமூக சேவகருமான பிரபாகரனின் பூரண அனுசரணையிலும் பெற்றோர், ஆசிரியர், நலன் விரும்பிகளின் பெரும் பங்களிப்புடனும் புதிதாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டது.

# சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்



நாவலப்பிட்டியை பிறப்பிடமாக கொண்ட உதயசாந்தி நாகலிங்கம் சட்டத்தரணியாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நாவலப்பிட்டி சொய்சாகலையைச் சேர்ந்த நாகலிங்கம், மலர்செல்வி தம்பதியினரின் புதல்வியான இவர், கதிரேசன் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கதிரேசன் மத்திய கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்றார்.

இளங்கலை சட்டப்படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் (Bachelor of Law L.L.B. Hons) கற்றார்.

இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணியாக சித்தி பெற்றார்.

## நுவரெலியாவில்

# கரப்பந்தாட்ட பயிற்சி மத்திய நிலையம்



மலையகத்தில் முதன்முறையாக கரப்பந்தாட்ட பயிற்சி மத்திய நிலையம் நுவரெலியாவின் உடபுஸல்லாவ டலோஸ் தோட்டத்தில் நேற்று புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. மத்திய மாகாணத்தில் பிரசித்தி பெற்ற சிறந்த கரப்பந்தாட்ட வீரரான அமரர் நாகலிங்கம் கமலேஸ்வரனின் பெயரில் 'கமலேஸ் கரப்பந்தாட்ட மத்திய பயிற்சி நிலையம்' என இந்நிலையத்துக்கு பெயரிடப்பட்டுள்ளது.

கரப்பந்தாட்ட வீரர் அமரர் நா.கமலேஸின் புதல்வர் கமலேஸ்வரன் கணிஸ்நுவான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய கரப்பந்தாட்ட முன்னாள் தலைவர் எஸ்.சி.ஏக்கநாயக்க, வலப்பனை பிரதேச விளையாட்டுத்துறை அதிகாரி சாயா மதுவந்தி, நுவரெலியா மாவட்ட கரப்பந்தாட்ட வீரர்களின் மூத்த பயிற்றுவிப்பாளர் குலஶ்ரீ சமரசிங்க உள்ளிட்ட கலர் கலந்துகொண்டனர்.

**(ஆ.ரமேஸ்)**

## கண்டியில்

# டெங்கு நுளம்பு பெருக்கம் வேகமாக அதிகரிப்பு

**விசேட வைத்திய நிபுணர்**
**அக்குறணை குறூப் நிருபர்**

குடம்பிகளின் பரவல் தொடர்பான ஆய்வின் அடிப்படையில் கண்டி மாவட்டத்தில் மிக வேகமாக டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் அதிகரித்து வருவதாக, கண்டி மாவட்ட சமூக வியாதிகள் ஒழிப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் கிருசாந்த மாசச்சி தெரிவித்தார்.

கண்டி மாவட்டச் செயலகத்தில் டெங்கு ஒழிப்பு தொடர்பான குழுவின் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கும் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றதுடன், இதன்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய டெங்கு ஒழிப்பும் பிரிவினரால் அடையாளம் காணப்பட்ட அதிக அவதானம்மிக்க வலயங்கள் நான்கில் கண்டி மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அடங்குவதாகத் தெரிவித்த அவர், ஆகையால் உள்ளூராட்சி அமைப்புகள் இது தொடர்பாக விழிப்படைய வேண்டுமென்றார்.

இந்த வருடத்தின் ஏப்ரல் மாத இறுதியில் 1,547 பேர் டெங்கு நோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அவர்களில் 232 பேர் ஏப்ரல் மாதத்தில் மட்டும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இவர்களில் 15 பேர் கண்டி மாநகர எல்லையில் வசிப்பதாகவும், அவர் கூறினார். கண்டி மாவட்ட டெங்கு ஒழிப்புப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ.கமகே, கண்டி மாவட்டச் செயலாளர் சந்தன தென்னகோன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மகாவலி கங்கையில்

# மண்ணரிப்பை தடுக்க ஏற்பாடு

**அக்குறணை குறூப் நிருபர்**

மகாவலி கங்கையின் இரு மருங்குகளிலும் மண் அரிப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில் பேராதனை பல்கலைக்கழக 'சீரோ பிளாஸ்டிக்' (பூச்சிய பிளாஸ்டிக்) எனும் அமைப்பு மரக்கன்றுகள் நடும் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்கு மகாவலி அபிவிருத்தி சபையினர் நேற்று முன்தினம் அனுசரணை வழங்கியுள்ளனர். இலுப்பை மரக்கன்றுகள் உள்ளிட்டவை இவ்வாறு நடப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பேராதனை பல்கலைக்கழக வளாகத்தின் மகாவலிக் கரையில் மரக்கன்றுகள் நடுகை இடம்பெற்றதுடன், இதற்கான நிகழ்வில் பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் ட்ரன்ஸ் மதுஜித், மகாவலி அபிவிருத்தி சபையின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவுக்கான பிரதி பணிப்பாளர் நில்மினி ஏக்கநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## டயனா எம்.பியாக...

பெற்றதையோ நீதிமன்றத்தின் முன் நிரூபிக்கத் தவறிவிட்டாரென்று உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. அவரது, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக்கும் உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை கடந்த அக்டோபர் 31, 2023 அன்று, தள்ளுபடி செய்த, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பும் இதன்போது உயர்நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டது. மேன்முறையீட்டு மனு மீதான நீண்ட விசாரணை மேற்கொள்ளப் பட்டு நிறைவு செய்த பின்னரே இதன் தீர்ப்பு நேற்று அறிவிக்கப் பட்டது. பிரதிவாதியான திருமதி டயானா கமகேவுக்கு, மனுதாரரான ஓஷல ஹேரத்துக்கு உரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்துமாறும் உத்தர விடப்பட்டது. உயர் நீதிமன்ற நீதியரசர்களான காமினி அமரசேக்கர மற்றும் குமுதுனி விக்கிரமசிங்க ஆகியோரின் இணக்கப்பாட்டுடன், உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனக் டி சில்வா, திறந்த நீதிமன்றில் தீர்ப்பை அறிவித்தார்.

டயானா கமகே இந்நாட்டின் பிரஜை என்பதை உறுதிப்படுத்தத் தவறிவிட்டாரென உரிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. தீர்ப்பின்படி, அவர் 2004 ஆம் ஆண்டு ஒக்டோபர் 05இல், பிரிட்டன் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு வந்துள்ளார் என்பது விசாரணையின் போது தெரியவந்துள்ளது. இதன் மூலம், வெளிநாட்டில் கடவுச்சீட்டொன்றை பெறும்போது, நாட்டிலுள்ள எந்தவொரு நப ரி னதும் குடியுரிமை தானாகவே இரத்து செய்யப்படுகிறதென்றும் நீதிபதிகள் குழாம் சுட்டிக்காட்டியது.

இருந்த போதிலும் இலங்கைக்கு வந்த அவர், இரண்டு உத்தியோகபூர்வ ம ற்று ம் இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை இலங்கையில் பெற்றுள்ளதாகவும் அந்த கடவுச்சீட்டை பயன்படுத்தி அவ்வப்போது வெளிநாடுகளுக்கு பயணம் செய்துள்ளதாகவும் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இந்நாட்டின் பிரஜை அல்லாத பிரதிவாதியான டயானா கமகே, குறிப்பிட்ட கடவுச்சீட்டை பெற்றுக் கொள்ளல் மற்றும் பயன்படுத்தல் மூலம் அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குடிவரவு ,குடியகல்வு சட்டத்தின் கீழ் திருமதி டயானா கமகேவுக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட உண்மை களின்படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்காவிட்டாலும், அவரைக் கைது செய்ய போதுமான விடயங்கள் உள்ளதாக மாஜிஸ்திரேட் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளதாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாமின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவரைக் கைது செய்யாமை குறித்து போதுமான உண்மைகளைச் சொல்லும் திறன் கொண்டது என்றாலும், சம்பந்தப் பட்ட தீர்ப்பில் சட்டம் அனைவருக்கும் நியாயமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீதி தேவதையின் கண்கள் சட்டத்தின் முன் வரும் நபரின் பணம், அதிகாரம் அல்லது வேறு விடயங்கள் காரணமாக சட்டத்தின் முன்னால் பாரபட்சத்துக்கு உள்ளாகக் கூடாது என்பதற்காகவே கண்கள் கட்டப்பட்டுள்ளன என்பது இந்த வழக்குத் தீர்ப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 12 (1) ஆவது பிரிவு சட்டம் அனைவருக்கும் நியாயமானதாக இருக்க வேண்டும் என்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தின் பார்வையில் எந்தவொரு நபரும் பாகுபாடு காட்டப்படவோ அல்லது விசேடமாக காட்டவோ கூடாது என்று உத்தரவாதம் அளித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றம், பிரதிவாதியான திருமதி டயானா கமகேவின் குடியுரிமை தொடர்பான ஆவணங்களின் மூலப் பிரதிகள் மேன்முறையீட்டுக்காக தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவுடன் சமர்ப்பிக்கப்படாதது அந்த மனு நிராகரிக்கப்பட்டதற்கான காரணமென மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் விதிகள் பொருந்தாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதன்படி, இந்த மனுவைத் தக்க வைக்க முறையான வழக்குக் கோப்பை மனுதாரர் முறையாக சமர்ப்பித்துள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பிரிட்டனிலிருந்து இலங்கை வந்த திருமதி டயானா கமகே, தனது பிரிட்டன் குடியுரிமையை துறந்ததாக ஒரு போதும் குறிப்பிடவில்லையென தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இலங்கைப் பிரஜாவுரிமையை பெற நடவடிக்கை எடுத்ததாகவோ விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கொடுத்ததாகவோ அல்லது அவர் இலங்கை பிரஜை என நிரூபிப்பதற்கு நீதிமன்றத்தில் எவ்வித சான்றுகளையும் முன்வைக்கத் தவறியதாகவும். தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிவாதிக்கு எதிரான இந்த மனுவை முன்னெடுப்பதற்கு மனுதாரர் முறைப்படி வழக்கை தாக்கல் செய்துள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் மனுவை நிராகரித்தும் மனுவை ஏற்றுக்கொண்டும் வழங்கிய இரண்டு தீர்ப்புகளையும் செல்லுபடியற்றதாக்க உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இதன் பிரகாரம், பிரதிவாதியான திருமதி டயானா கமகேயினால், உரிய மேன்முறையீட்டு மனுவினால் கோரியபடி, பிரதிவாதி பாராளுமன்ற உறுப்பினராக எந்த அதிகாரத்தின் பேரில் பதவி வகித்து, அமர்ந்து வாக்களிக்கின்றார் என கேள்வி எழுப்பி, (*Quo warranto* ) தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ரிட் ஆணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

திருமதி டயானா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்யுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட்டமைக்கு எதிராக சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத், இந்த மேன்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார். இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகே உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக உள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகே பிரிட்டன் குடியுரிமை பெற்றவர் எனவும், இதில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க அவருக்கு தகுதியில்லை எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கு தீர்ப்பளித்த மூன்று நீதிபதிகள் கொண்ட மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாமின் பெரும்பான்மையான நீதிபதிகள், தள்ளுபடி செய்ய முடிவு செய்ததாக மனுதாரர் கூறினார். இந்த முடிவு நியாயமற்றது மற்றும் தவறானது என்று மனுதாரர் தெரிவித்தார்.

இலங்கையின் அரசியலமைப்பின்படி திருமதி டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியானவரல்ல என தீர்மானிக்குமாறும் இந்த மனுவின் மூலம் உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், இம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு சட்டத்துக்கு முரணானது என்பதை தீர்மானிக்குமாறும் மனுதாரர் நீதிமன்றத்தை கோரியிருந்தார்.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பிரிட்டன் பிரஜை என்பதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்யுமாறு ஆணை பிறப்பிக்குமாறு கோரி தாக்கல் செய்த ரிட் மனுவை, மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட குழாம், வழக்கு செலவுகளுடன் தள்ளுபடி செய்ய இரண்டுக்கு ஒன்று எனப் பிரிந்த முடிவின் மூலம் முடிவு செய்தது.

## இன்றைய பலன்கள்

(09.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** சிலருக்கு பதவி உயர்வு, சம்பளம் உயர்வு கி டைக்கக்கூடும். சொந்தத் தொழில் ஏற்றம் தருவதாக அமையும். புதிய வாடிக்கையாளர்களின் வருகையால் பொருளாதாரம் உயர்வு காணப்படும்.

**ரிஷபம் :** சக ஊழியர்களை அனுசரித்து செல்லுங்கள். சொந்த தொழில் வேலைப்பளு அதிகரிக்கலாம். புதிய நபர்களின் அறிமுகம் பலன் தரும்.

**மிதுனம்:** சொந்தத் தொழில் நல்ல வருமானம் தருவதாக அமையும். அவசரப் பணிகளில் ஓய்வின்றி ஈடுபடுவீர்கள்.

**கடகம்:** சக ஊழியர்களுடன் வீண் வாதங்களை தவிர்ப்பது நல்லது. சொந்த தொழில் லாபம் தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** உயர் அதிகாரிகளின் விருப்பப்படி அவசரப்பணி ஒன்றை செய்து பாராட்டு பெறுவீர்கள். சொந்த தொழில் நன்றாக நடைபெறும்.

**கன்னி:** பின்னர் செய்யலாம் என்று தள்ளி வைத்த பணி ஒன்றை உடனே செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். சொந்தத் தொழில் செய்பவர்கள் ஓய்வின்றி உழைக்க வேண்டியது இருக்கும்.

**துலாம்:** கடன் தொகை கைக்கு வந்து சேரும். சொந்தத் தொழில் புதிய லாபம் கிடைக்கும். கூட்டத்தொழில் வியாபாரம் சிறப்பாக நடைபெற்று எதிர்பார்க்கும் லாபத்தை பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** சொந்த தொழில் நன்றாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்களின் பணியை விரைந்து முடிக்க ஓய்வின்றி உழைப்பீர்கள்.

**தனுசு:** சிலருக்கு அலுவலக கடன் கிடைக்கும். சொந்த தொழில் சிறப்பாக நடைபெறும். பணவரவு கூடும். அவசரமான பணி ஒன்றை முடிக்க தீவிரமாக செயலாற்றுவீர்கள்.

**மகரம்:** அலுவலகத்தில் உள்ளவர்கள் பற்றி வீண் பேச்சுகளில் ஈடுபட்டால் உயர் அதிகாரிகளின் நடவடிக்கைக்கு ஆளாக நேரிடும். சொந்த தொழில் லாபம் அதிகரிக்கும்.

**கும்பம்:** வேலைப்பளு அதிகரிப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டியது இருக்கும். சொந்த தொழிலில் போதிய வருமானம் இருக்கும். வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்ற வேலைகளை முடித்துக் கொடுத்து பாராட்டு பெறுவீர்கள்.

**மீனம்:** சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். சொந்தத் தொழிலில் ஒவ்வொரு பணியும் அவசரப்படுத்தும். அதனால் ஓய்வின்றி உழைப்பீர்கள்.

## கிராமிய பொருளாதாரத்தை வலுப்படுத்த...

வேலைத் திட்டங்களையும் வெற்றியடையச் செய்வதற்கு கிராமிய ரீதியாக செயற்படும் அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பு அவசியமானது எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார். 2,100 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (08) அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

2023 டிசம்பர் 02 பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கிராம உத்தியோகஸ்தர்களுக் கான பரீட்சை முடிவுகளின்படி, பிரதேச செயலக மட்டத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற 2,100 விண்ணப்பதாரர்களுக்கு கிராம உத்தியோகஸ்தர் நியமனங்கள் வழங்கப்பட்டன. அடையாளமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

அஸ்வெசும, உறுமய போன்ற வேலைத் திட்டங்கள் குறித்து புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, குறைந்த வருமானம் பெறும் மக்களை மேம்படுத்த அரசாங்கம் இந்த திட்டங்களை ஆரம்பித்துள்ளதாகவும், தமது பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக இந்த வேலைத் திட்டங்களில் இணைந்து தீவிரமாக செயல்படுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

இன்று வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். நாங்கள் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு உடன்பாட்டை எட்டியுள்ளதோடு அதிலுள்ள பல நிபந்தனைகள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. தற்போதைய அபிவிருத்தித் திட்டம் கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் வெற்றிகரமான அறுவடையைப் பெற முடிந்தது. மேலும், 2023 ஆம் ஆண்டின் பெரும்போகத்தில், மீண்டும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றோம். இப்பங்களிப்பின் காரணமாக இன்று நாம் பொருளாதார ரீதியில் வலுவடைந்துள்ளோம்.

இதன் மூலம் இன்று 2,100 கிராம உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள முடிந்தது. நிர்வாகப் பணிகள் மட்டுமின்றி, கிராமப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் பொறுப்பும் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து செயற்பட வேண்டிய 04 பிரிவுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் அஸ்வெசும திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. சமுர்த்தியை விட மூன்று மடங்கு அதிக கொடுப்பனவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பயனாளிகள் குறித்த தகவல்களை கணினிமயமாக்கும் பணி இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும்.

## ஜூன் மாதத்துக்குள் நிறைவு...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

நாட்டின், அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி சகல நாடுகளுடனும் உறவுகளைப் பேணி வருகிறது இலங்கை . இதனால்,இறையாண்மை பாதுகாக்கப்பட்டு நாட்டுக்கு பல சலுகைகள் கிடைத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சீனா மற்றும் இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு அந்நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு அரசாங்கம் செயற்பட்டுவதாகவும் அமைச்சர் அலி சப்ரி மேலும் சுட்டிக் காட்டினார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

“அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைப் பேணுவதுடன் சகல நாடுகளுடனும் நல்ல உறவு முறையை இலங்கை பேணி வருகிறது. நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்து ஒவ்வொரு நாட்டுடனும் சிறப்பான தொடர்புகளைப் பேணுவது, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பை எளிதாக்கியது.

சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் பெரிஸ் கிளப் ஆகியவை கடன் மறுசீரமைப்புக்கு பெரும் ஆதரவை வழங்கின. சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையைப் பெற்ற பின்னர் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர முடியும்.

சீனாவுடனும் இந்தியாவுடனும் எமக்கு நெருங்கிய உறவை ஏற்படுத்த முடிந்துள்ளது. சீனாவுடன் ஒன்பது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்தியாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையில் அதிகளவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள். குறிப்பாக புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய அதானி நிறுவனம் முன்வந்துள்ளது. மேலும் இலங்கையில் முதலீடுகள் செய்வது குறித்து சவுதி அரேபியாவும் கவனம் செலுத்தியுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் தங்களது எரிபொருள் சார்ந்த பொருளாதாரத்தை தாண்டி, ஏனைய நாடுகளில் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த எதிர்பார்க்கின்றன. அதனை இலங்கைக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நாம் நடவடிக்கை எடுக்கிறோம்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு சர்வதேச விதிகளுக்கு அமைய வெளிநாடுகளுடன் உறவுகளைப் பேணி வருவதால், ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் தொடர்பில் சர்வதேச சமூகத்திற்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை. ஈரான் வழங்கிய உமா ஓயா திட்டமானது அடுத்த மாதம் முதல் தேசிய மின்சார கட்டமைப்பில் 120 மெகாவொட் மின்சாரத்தை வழங்கும். இதன் மூலம் அடுத்த மாதம் மின்கட்டண திருத்தத்தின் போது இதன் பலன் மக்களுக்கு கிடைக்கும்.

இலங்கையை சுற்றுலா மையமாக மாற்ற வேண்டுமாயின், விசா கட்டணத்தில் கவனம் செலுத்தாமல், சுமார் ஐம்பது நாடுகளுக்கு இலவச விசா வழங்க வேண்டும். இதன் ஊடாக சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கலாம் என அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார்.

## அதானியின் மின் திட்டம் நிறைவேறினால்...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பெற்றோலிய உற்பத்தி சட்டத்தின் கீழான கட்டளைகள் தொடர்பான சபை விவாதத்தில், உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நாட்டின் தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியத்தை தவிர்த்து பயணிக்க முடியாது. அனைவரும் இதை,ஏற்றுக் கொண்டுள்ளனர். எனினும் எதிர்க்கட்சி அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. எதிர்க் கட்சி எப்போதாவது அரசாங்கத்தை ஆட்சி செய்யுமானால், அப்போது அவர்களுக்கும் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல நேரிடும்.நாட்டுக்கு மின்சாரத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய மூன்று முறைமைகள் காணப்படுகின்றன.

இரண்டு அரசாங்கங்களுக்கிடையில் உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

உரிய காலத்தில் மின்சார உற்பத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தாத காரணத்தாலேயே, தற்போது எதிர்க் கட்சிக்கு மின்சாரம் தொடர்பில் பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

அவ்வாறு மின் உற்பத்தி திட்டங்களை நிர்மாணிக்காமல் மின் கட்டணங்கள் அதிகரித்துள்ளமை தொடர்பிலும், எதிர்க்கட்சியினர் குரல் எழுப்புகின்றனர். அதேபோன்று மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கி இதன் மூலம் மின் கட்டணத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போதும் இதற்கு எதிராக எதிர்க்கட்சி குரல் எழுப்புகிறது.

## டயானாவின் வெற்றிடத்துக்கு...

தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் தீர்மானிக்குமென கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

“முன்னதாக நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக, முஜிபுர் ரஹ்மானை களமிறக்க தீர்மானிக்கப்பட்டது.

இதனால், முஜிபுர் ரஹ்மான் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார்.

டயானா கமகேவுக்குப் பதிலாக யாரை நியமிப்பது என்பதை தீர்மானிக்கும் போது இந்த விடயத்தையும் நாங்கள் கருத்தில் கொள்வோம்” இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தொடர்பில் உயர் நீதிமன்றம் ஒரு விசேட தீர்ப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஹிருணிகாவுக்கு எதிரான...

திகதி எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு தொடர்பான ஆட்சேபனைகளை இரண்டு வாரங்களுக்குள் தாக்கல் செய்ய ஹிருணிகா பிரேமச்சந்திரவின் சட்டத்தரணிகளுக்கு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் மொஹமட் முஸம்மிலின் மகன் தாக்கல் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

## ஜூன் மாதத்துக்குள் நிறைவு...

இந்நிதி ஒதுக்கீடுகள் வழங்கப் படுமென்றும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

விவசாயத் திணைக்களத்தின் கூற்றுப்படி, கடந்த சில பருவங்களில் நெற்பயிர்ச் செய்கைக்கு *Muriate of Potassium* உரத்தின் பயன்பாடு அளவு குறைந்துள்ளது.

நெற்பயிர்களை வலுப்படுத்தவும், நெல் விதைகளை முழுமையாக்கவும் *Muriate of Potassium* உரமிடுவது கட்டாயம் என வேளாண்மைத் துறை வலியுறுத்துகிறது.

இருந்தாலும், கடந்த பருவத்தில் *Muriate of Potassium* உரத்தின் பயன்பாடு குறைந்துள்ளது.

கடந்த பருவத்தில் 08 இலட்சம் ஹெக்டேயர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் 11,000 மெற்றிக் தொன் உரங்களே விற்பனை செய்யப்பட்டதாக திணைக்களத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. *Muriate of Potassium* உரத்தை ஊக்குவிக்கும் நோக்கில், உர மானியத் தொகையை விவசாயிகளின் கணக்கில் வரவு வைக்க விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது.

## நிதி இராஜாங்க அமைச்சருடன்...

இறக்குமதி துறை சார்ந்த நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை வாகன இறக்குமதியை மீள ஆரம்பிப்பதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்திற்கும் அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நிதியமைச்சில் இடம்பெற்றது.

அனைத்து வாகனங்களையும் ஒரே நேரத்தில் இறக்குமதி செய்வதற்கு பதிலாக பல பிரிவுகளின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது மிகவும் நடைமுறைக்குரியதென இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

பொது போக்குவரத்துக்கு தேவையான வாகனங்கள், பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், தனியார் வாகனங்கள் போன்றவற்றை பாகங்களாக இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவது மிகவும் நடைமுறைக்குரியது என வலியுறுத்தப்பட்டது. வரி செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைகள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## யாழ். வலி வடக்கில்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் இலகுவாக பிரவேசிக்கக் கூடிய வகையில் பாதைகளை திறக்கவும், வீதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்குமாறு பொதுமக்கள் கோரினர்.இதற்கிணங்க

பாதுகாப்பு பிரிவினருடன் கலந்துரையாடிய

ஆளுநர் அனுமதியை பெற்றுக்கொடுத்தார். பொன்னாலை பருத்தித்துறை கடற்கரை வீதியில் கண்ணகி அம்மன் கோவில் சந்தியிலிருந்து நாகதம்பிரான் கோவில் வீதி ஊடாக விடுவிக்கப் பட்ட காணிக்குள் தற்போது பிரவேசிக்க முடியும்.

வீரப்பளை வீதியில் பலாலி வீதி நோக்கி 100 மீற்றர் தூரத்துக்குள்ளும், வீரப்பளை சந்தியில் தெற்கு நோக்கி தம்பாளை வீதி (விமான நிலைய வீதி ) ஊடாகவும் விடுவிக்கப்பட்ட காணிக்குள் பிரவேசிக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

## கொவிட் தடுப்பூசிகளை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பிரிட்டன் நீதிமன்றத்தில் அஸ்ட்ராசெனிகா நிறுவனம் தாக்கல் செய்த ஆவணத்தில், கொவிஷீல்ட் தடுப்பூசி மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில், டிடிஎஸ் என்ற பக்க விளைவை ஏற்படுத்தும் என ஒப்புக்கொண்டது. கொவிஷீல்ட் தடுப்பூசி, இலேசாக பக்க விளைவுகளை தருமென அந்நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்தடுப்பூசி ஏற்றியவர்களுக்கு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கொவிஷீல்ட் தடுப்பூசியின் பக்கவிளைவுகள் பற்றிய ஆய்வு மற்றும் மருத்துவ நிபணர் குழுவை அமைக்குமகாகறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தடுப்பூசிகளை திரும்பப் பெறுவதாக அஸ்ட்ராசெனிகா நிறுவனம் அறிவித்துள்ளது. மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் கொவிஷீல்ட் தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்துள்ளதாக கூறப்படுகிறது. இரத்த உறைவு (Blood clots) , blood Platelets எண்ணிக்கை குறைவு உள்ளிட்ட பக்க விளைவுகள் ஏற்பட ஆபத்துள்ளதாக பிரித்தானிய நீதிமன்றத்தில் அஸ்ட்ராசெனிகா நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

## பேருவளையில் திண்ம... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கடலுக்கு செல்லும் கால்வாய் அடைபட்டுள்ள தால், சிறிய மழை பெய்தாலும் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின்றன.

ஈக்கள் பெருகுவதால் வாந்தி பேதி போன்ற நோய்கள் பரவி வருகின்றன. நுளம்புகள் பெருகி டெங்கு பரவும் அபாயம் அதிகமாக உள்ளது. தோல் நோய்கள் பொதுவாக காணப்படுகின்றன. மற்றும் இந்த கிராமத்தில் வசிப்பது நுரையீரல் நோய்கள் உட்பட பல நோய்களுக்கு காரணமாக அமைந்துள்ளன.” பேருவளை மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் இந்த கழிவுகள் அகற்றப்படும் விதத்தினால் இன்று பாரிய குப்பை மேடு உருவாகியுள்ளது.

மீதொட்டமுல்லை குப்பை மேட்டில் நடந்ததைப் போன்று பாரிய உயிர்ச் சேதங்களுக்குப் பின்னர் பொறுப்பானவர்களின் கண்கள் திறக்கப் போகின்றனவா?

இவ்விவகாரத்தில் பிரதமரை நேரடியாக குற்றம் சாட்டுமளவுக்கு நியாயமற்றவனாக நடந்து கொள்ளமாட்டேன். சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பொறுப்பான அனைத்துத் தரப்பினருக்கும் இது தொடர்பில் பொறுப்புள்ளது.

குறிப்பாக, உள்ளூராட்சி மன்றம், சுகாதாரத் திணைக்களம், சுற்றாடலுக்குப் பொறுப்பான தரப்பினர் என அனைவருக்கும் இது தொடர்பில் பொறுப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## இராணுவம் மற்றும் இந்திய தூதரகம்...

இலங்கை, இந்தியாவுக்கிடையிலான வலுவான பிணைப்பை அடையாளப்படுத்துவது மட்டுமல்லாமல், தேசத்தின் பாதுகாப்புக்காக தியாகம் செய்தவர்களுக்கு அல்லது இயலாமை காரணமாக சவால்களை எதிர்கொள்வோருக்கு ஆதரவளிப்பதற்கான கூட்டு முயற்சியையும் காட்டுகிறது.

செயற்கை கால்களை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்ற 08 இந்தியர்களின் பங்களிப்போடு கடந்த (03) ஆரம்பிக்கப்பட்ட பயிலரங்கம் (23) நிறைவடைகிறது.

375 இராணுவ வீரர்களுக்கும், கடற்படை விமானப்படை, மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 75 பேருக்கும் செயற்கை கை கால்கள் விநியோகிக்கப்படவுள்ளன. இதனை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வின் போது நான்கு படையினருக்கு செயற்கை கை, கால்கள் வழங்கப்பட்டன. மேலும், 200 பொதுமக்களுக்கும் செயற்கை கை, கால்கள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

நிழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர்சந்தோஷ் ஜா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண (ஓய்வு), இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, ராகம ரணவிரு செவன நிலையத்தின் தளபதி மற்றும் இராணுவ உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கண்டி விவேகானந்தாவில் பரிசளிப்புடனான புத்தாண்டு விசேட கலாசார நிகழ்வுகள்

கண்டி விவேகானந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழா மற்றும் 2024 ஆம் ஆண்டின் சித்திரைப் புத்தாண்டு விசேட கலாசார நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ். சிவஞான சுந்தரம் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ் பிரிவுக்கான உதவிப் பணிப்பாளர் பி. விக்கினேஸ்வரன் மற்றும் கௌரவ அதிதிகளாக முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் துரை மதியுகராஜா , கண்டி கல்வி வலயத்தின் தமிழ் பிரிவுப் பணிப்பாளர் எஸ் தமிழ்ச் செல்வன் மற்றும் திருமதி பெரேரா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



சிறப்பு விருந்தினர்களாக மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் ,கண்டி சிட்டி டெக்ஸ் உரிமையாளர் எம். சுந்தரமூர்த்தி, மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன், மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் பொருளாளர் சந்ததி ரவதனா ரட்ணராஜ குருக்கள், தேவி நகைக் கடை உரிமையாளர் திருமதி பத்மாவதி சந்திரமூர்த்தி ,கண்டி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் தேசபந்து எம். தீபன் ஆகியோர் பங்கேற்றனர். இப்பிரமுகர்கள் அனைவரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



கண்டியைப் பொறுத்தவரையில் தமிழ் வர்த்தக சமூகத்தில் மிக முக்கியமாக மலையக கலை கலாசார இரத்தின தீப சங்கத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வன் அண்மைக் காலமாக பாடசாலைகளுக்கு உதவி செய்து வருவதை காணக்கூடியதாக இருக்கிறது. அவை மட்டுமல்ல தமிழ் இலக்கியத் துறைக்கு பெரும் பங்களிப்பை ஆற்றியுள்ளார். கல்வித் துறை சார்ந்த புத்தக வெளியீடுகள், மலையக கலை இலக்கியம் சார்ந்த நிகழ்வுகள் போன்ற தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக பெரியதொரு பங்களிப்பைச் செய்து வருகிறார் என்பது முக்கிய விடயமாகும்.

**பாடசாலை அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் தனதுரையில்;**

எமது இந்து சமய கலாசார பாரம்பரியங்கள் மாணவர்கள் மத்தியில் அழிந்து கொண்டு செல்வதன் காரணமாகவும், கலாசாரப் பாரம்பரியங்களை இன்று மாணவர்கள் கடைப்பிடிப்பதில்லை என்றதொரு பாரிய குற்றச் சாட்டு நிலவுகிறது. அதுவும் ஒரு வகையில் உண்மைதான். மாணவர்கள் புதிதாக நவீன கால உலகத்திற்கு ஏற்ப முயற்சிக்கின்றார்களே தவிர பழைய பாரம்பரிய கலாசார அம்சங்களை கடைப்பிடித்து வாழ்வதற்கு மாணவர்கள் முயற்சிப்பது குறைவு. வீடுகளிலும் அவ்வாறுதான் இருக்கிறது.

எனவே கலாசாரப் பாரம்பரியங்கள் பற்றி மாணவர் மத்தியில் விழிப்புணர்வூட்டுவதற்காகவும் இவ்வாறு புத்தாண்டு நிகழ்வுகள் கொண்டாடப்பட வேண்டும். ஏனைய சமூகத்தினர்களை எவ்வாறு வரவேற்பது, புத்தாண்டு நிகழ்வுகளில் என்னென்ன? எவ்வாறான விளையாட்டுக்கள் இருக்கின்றன. கடவுளை எவ்வாறு வணங்க வேண்டும். அதற்குரிய பாரம்பரிய முறைகளை நாங்கள் சொல்லிக் கொடுப்பதற்காகவே இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த நிகழ்வுகளில் மாணவர்கள் தங்களுடைய செயற்பாட்டின் ஊடாகவே அனைத்தையும் செய்து காட்டினார்கள். ஏனைய சமூகங்களுடன் நட்புறவை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற வகையிலான விடயங்களை மாணவர்கள் செய்து காட்டினார்கள். இதற்கு மாணவர்களுடைய வருகையும் பெற்றோர்களுடைய வருகையும் பங்களிப்பும் நூறு விகிதமாக இருந்தது. இது வரவேற்கக் கூடிய விசயம்.

எதிர்வரும் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் இஸ்லாமிய சிங்களப் பாடசாலைகளை இணைத்துக் கொண்டு மேலும் சிறப்பாகச் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ள நாங்கள் தீர்மானித்துள்ளோம். அதேவேளை, இந்நிகழ்வில் பெரியார்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றமைக்கான காரணம் குறிப்பாக அதிதிகளை வரவேற்று கௌரவிப்பது என்பது எதிர்காலத்தில் எங்களுடைய மாணவர்களும், இங்கு வருகை தந்துள்ள அதிதிகள் கௌரவிக்கப்படுவதைப் போல சிறிய காலத்தில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் போன்றவர்களை அழைத்து மாணவர்களையும் முன்னிறுத்தி இம்மாணவர்களும் இத்துறைகளில் ஆர்வத்தை வளர்க்க வேண்டும் என்பதை மறைமுகமாக எடுத்துக் காட்டியுள்ளோம். இதற்காக ஞானதீப விருது என்ற பெயரில் பல பெரியார்களை வரவழைத்து கௌரவித்து வருகின்றோம். இந்த விருது வழங்குவதன் நோக்கம் எதிர்காலங்களில் இந்த வர்த்தகப் பிரமுகர்களுடைய செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காகவும் அவர்கள் தங்களுடைய உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதன் மூலம் கல்வித் துறையை பரந்த மட்டத்தில் மேம்படுத்த வேண்டும் என்பதுதான் எமது முக்கிய நோக்கம்.









இப்பாடசாலையைப் பொறுப்பேற்று ஆறு மாதம் காலம் ஆகின்றது. அதற்குள் ஒரு செயற்கை நுண்ணறிவு கற்கை வகுப்பை ஆரம்பித்துள்ளோம். அது குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்டதாகும். மாணவர்களுக்கு வெளியே இருந்து வளவாளர்களைக் கொண்டு வந்து கல்வித் துறையை உயர்த்துவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகளை செய்துள்ளோம். குறிப்பாக மாணவர்களை ஊக்குவித்தல் ஊடாக சிறந்த கல்வி அறிவைப் பெறுவதற்கு ஊக்குவித்தல் செயற்பாடுகளை தொடரேச்சியாக செய்து வருகின்றோம்.

இப்பிரதேச மாணவர்களின் வெளிச் சூழல் சற்று மோசமாகத்தான் இருக்கிறது. மாணவர்கள் பாடசாலைக்குள் நுழைந்தவுடன் தங்களை இயல்பாக்கம் ஆக்கிக் கொள்வார்கள். என்றாலும் கூட இந்த மாணவர்கள் தற்காலத்தில் கொரோனா தொற்றுக் காலத்திற்குப் பிறகு இந்தப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவும் மாணவர்களுடைய வரவு ரொம்பக் குறைவாக இருக்கிறது. இந்த மாணவர்களுடைய வரவை கூட்டிக் கொள்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது.

பெற்றோர்கள் மத்தியில் கல்வியின் பால் உள்ள விழிப்புணர்வு அல்லது கல்வியின் மீது செலுத்துகின்ற கவனத்தை குறைத்துக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக அன்றைய நாளை எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும் என்ற காரணத்தினால் பிள்ளைகளைப் பார்க்கக் கூடிய சூழல் அவர்களிடத்தில் இல்லை. முழுமையாக ஆசிரியர்களே அவ்வளவு பொறுப்புக்களையும் சுமக்க கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

**கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட கண்டி கல்வி வலயத்தின் தமிழ் பிரிவுப் பணிப்பாளர் எஸ் தமிழ்ச் செல்வன் உரையாற்றும் போது;**

கண்டி மாநகரில் உள்ள பாடசாலைகளில் வேகமக வளர்ந்து வரும் பாடசாலைகளில் கண்டி விவேகானந்தா பாடசாலை காணப்படுகிறது. புதிதாக வருகை தந்துள்ள அதிபர் கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொண்டு செயற்படுகின்றார்.





இதுவரை வந்த பெறுபேறுகளில் இனிவரும் பெறுபேறுகள் மிகவும் அதிகமான வளர்ச்சி விகிதத்தைக் காட்டும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை.

இப்பாடசாலையைப் பொறுத்தவரையில் பெரிய இடவசதியோ வேறு பெரியளவிலான பௌதீக வளங்களும் இல்லை. ஆனாலும் அனைத்துப் பெரிய பாடசாலைகளில் நடைபெறும் அனைத்துச் செயற்பாடுகளையும் இந்தப் பாடசாலை முறையாக காலத்திற்கு காலம் கடந்த காலத்தில் இருந்த அதிபர்மார்களும் சரி இப்போதுள்ள அதிபரும் சரி செய்து கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்வதாக இருந்தால் விளையாட்டுப் போட்டியாக இருக்கட்டும், பாடசாலை மட்டத்தில் நடைபெறும் கலைவிழாக்களாக இருக்கட்டும் அல்லது வேறு பரிசளிப்பு விழாக்களாக இருக்கட்டும் தத்தமது பாடசாலையின் பெற்றோர்களுடைய நிலைக்கு ஏற்ப செய்து கொண்டு செல்கின்றனர். அதற்கு மிக முக்கியமான காரணம் இருப்பது சமூகம் ஆகும். குறிப்பாக பாடசாலைச் சமூகம் என்பதை விட வர்த்தக சமூகம், வர்த்தப் பிரமுகர்கள் இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். பாண்ட் வாத்தியம் தேவையை ஏற்றுக் கொண்டு எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி இந்தச் செல்வந்தர்கள் நலன்விரும்பிகள் விவேகானந்தாப் பாடசாலையாக இருக்கட்டும் கண்டி நகரிலுள்ள பாடசாலையாக இருக்கட்டும் அதற்கு முன்வந்து இயங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆரம்ப காலத்தில் இந்தப் பாடசாலைக்கும் வர்த்தக சமூகத்திற்கும் தொடர்பு மிக மிகக் குறைவாக இருந்தது. அது ஒரு வேறு வழியாகவும் அரச பாடசாலை ஒரு வழியாகவும் இருந்தது. அந்த நிலைமை இன்று மாறி அரச பாடசாலையாக இருந்தால் கூட தங்கள் பரம்பரைக்குரிய பாடசாலை என்ற வகையில் நகர்ப்புற வர்த்தகப் பிறமுகர்களும், நலன் விரும்பிகளும்,



பாடசாலைக்கு உதவி புரிவதில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

அவற்றுக்கும் மேலாக இன்று நடைபெறும் விழாவான கொரோனா காலத்தில் ஐந்தாம் ஆண்டுப் பரீட்சையிலும் மற்றும் க. பொ. த சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டு நிகழ்வாக இணைக்கப்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் எந்தவொரு பாடசாலையும் முறையாக செயற்பட வில்லை. ஆனால் அந்தக் காலத்தை எல்லோரும் கைவிட்டுச் சென்று அடுத்தடுத்து புதிய அத்தியாயத்திற்குச் சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்தப் பாடசாலையில் அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இரு வருடத்திற்குரிய மாணவர்களுக்குரிய பரிசளிப்பையும் இந்த மேடையில் செய்கின்றனர். அதற்கு எமக்கு முக்கியமாக இருப்பவர் எனது நகர வர்த்தகப் பிரமுகர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் நன்றி பாராட்டுதல் வேண்டும். ஆகவே இந்தப் பிள்ளைகளை ஊக்குவிக்கும் வகையில் கௌரவிப்பை நடத்துவதன் ஊடாக ஏனைய மாணவர்கள் முன் மாதிரியாகத் திகழ்வர்.

அதே போன்று இன்னும் ஒரு மிக முக்கியமான நிகழ்வு இப்பாடசாலையில் இடம்பெறுகிறது. அதுதான் புது வருட விழாவாகும்.

புது வருடம் என்பது தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நடைபெறுகின்ற ஒரு விழாவாகும். இது அனைவரும் பின்பற்றுகின்ற விழா. அதனை மிக அழகாக வகுப்பு ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டு இன்றைய முழு நாளும் அதற்காக ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்புக்களிலும் புது வருட விழாக்களை எப்படி சிங்கள மக்களும் இந்து மக்களும் தங்கள் கலாசாரத்திற்கு ஏற்றமாதிரி வேற்றுமையில் ஒற்றுமை காணக் கூடிய வகையில் செய்து கொண்டிருக்கின்றார்கள். அந்த அமைப்பில் சிங்கள கலாசாரத்தைம் தமிழ் கலாசாரத்தையும் ஒரு வகுப்பறையில் உருவாக்கக் கூடிய சூழ்நிலையில் இன்றைய நிகழ்வு நடைபெறுகின்றது. ஒரு வித்தியாசமான நோக்கில் ஒரு நாளில் இரு நிகழ்வுகளை இப்பாடசாலை அதிபர் ஏற்பாடு செய்துள்ளார். இதற்குப் பெற்றோர்களும், ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இந்தப் பாடசாலையில் இன்னுமொரு முக்கியமான விடயம். சமூகத்துடன் இணைந்து வேலை செய்வது

அதேவேளையில், இந்நிகழ்வில் வர்த்தகப் பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டமை பாராட்டத்தக்க விடயம் ஆகும். இந்தப் பாடசாலையின் அபிவிருத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உதவி புரிந்த முன்னாள் மத்திய மாகாண சபை முதல்வர் துரை மதியுகராஜா இந்தப் பாடசாலையின் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார். அவர் கௌரவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து மலையக கலை கலாசார சங்கத்தின் தலைவர் எஸ் பரமேஸ்வரன் கௌரவிக்கப்பட்டார். சிட்டி டெக்ஸ் உரிமையாளர் கௌரவிக்கப்பட்டார். சமூகப் பணியாளர் தேசமானிய சந்திரவதனா ரட்ணராஜா குருக்கள், தேவி நகைக் கடையின் உரிமையாளரின் துணைவியார், கலாசார தொடர்புடைய சிங்களப் பெண்மணி ஒருவரும் வருகை தந்திருந்தார்.





இப்பாடசாலையில் நடைபெறும் மற்றுமொரு விடயம் இந்தப் பாடசாலைக்கு உதவி செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவ்வப் போது கௌரவிப்பைச் செய்து அனுப்பி வைக்கின்றார்கள். இதில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. .இராமன் உள்ளிட்ட மிக முக்கிய பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**எஸ். ஜீவராஜ்**


## கேள்விக்கான அழைப்பு

### இலங்கை தேசிய வைத்தியசாலை

(சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு)

**வளிச்சீராக்கி இயந்திரம் வழங்கிப் பொருத்துதல்**

01. 2024.05.29 மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணப்படும் வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்கிப் பொருத்துவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

    01. Split type air conditioners 2400 BTU WM - 01

    02. Split type air conditioners 4800 BTU CM- 05

02. இலங்கை சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் அல்லது அதிகாரமளிக்கப்படும் பிரிதிநிதிகள் மாத்திரம் இக் கேள்வி அழைப்பிற்காக சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவர்.

03. வாரத்தின் வேலை நாட்களில் 2024.05.09 முதல் 2024.05.28 வரை மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தினால் மீளளிக்கப்படாத ரூ. 2000.00 கட்டணத்தை செலுத்தி பொது நிர்வாகப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொ. பே. இலக்கம் - 011-2691111 நீடிப்பு 2339)

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.05.29 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

05. மேலதிக தகவல்கள் தேவைப்படின் இலங்கைத் தேசிய வைத்தியசாலையின் கீழ்க்காணும் தொ.பே. இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

    (தொ.பே. இலக்கம் 011-2691111, நீடிப்பு - 2339)

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு - 10**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய் 2024.05.07

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5468
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,698,204.00
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 8 1 3 4 5 9

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 043
ஆங்கில எழுத்து T வெற்றி இலக்கங்கள் 3 4 5 9

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3710 சீட்டிழுப்பு திகதி 2024.05.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,242,642.16
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 34 39 62 69 விசேட எழுத்து B
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 09531

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1816 2024.05.07
43390
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 431,599,770.00
ஆங்கில எழுத்து D சுப்பர் இலக்கம் 18 வெற்றி இலக்கங்கள் 27 34 36 75
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.05.07
சீட்டிழுப்பு இலக்கம் 0294
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 2 4 0 7 7 3
L7 எழுத்து H
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 29,461,189.28

ராசி சுப பலன்
திகதி 2024.05.07 சீட்டிழுப்பு இலக்கம் 777 செவ்வாய்
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,300,569.44
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 05 22 26 56
தனயோக இலக்கம் 60695
நாளுக்கான விதி எண் 24

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1498 2024.05.07
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 90,808,801.84
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 15 34 51 53 விசேட எழுத்து P
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46652

# கிழக்கின் குரல்



# காத்தான்குடியில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள ஆயிரத்துக்கு மேற்பட்டோர் தெரிவு

## சவூதி தூதுவர் நேரில் சென்று ஆராய்வு

**புதிய காத்தான்குடி தினகரன், ஏறாவூர் நிருபர்கள்**

சவூதி அரேபியா மன்னர் சல்மானின் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையத்தின் நூர் தன்னார்வத் திட்டத்தின் கீழ் காத்தான்குடி வைத்தியசாலையில் ஏற்பாடு செய்துள்ள கண்புரை சத்திரசிகிச்சை முகாம், இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி தலைமையில் நேற்று 08 ஆம் திகதி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் நஸீர் அஹமத் விசேட அதிதியாகக் கலந்து கொண்டதுடன், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம், சவூதி அரேபிய மன்னர் சல்மானின் 'நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கான மன்னர் மையத்தின் பணிப்பாளர் கண்சத்திரசிகிச்சை நிபுணர் அப்துல் கரீம், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

'சவூதியின் ஒளி' இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாமை தூதுவர் பார்வையிட்டதுடன் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் ஜாபீர், அவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார். 'சவூதியின் ஒளி' இலவச கண்புரை சத்திரசிகிச்சை முகாம் கடந்த (06) திங்கட்கிழமை காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் ஆரம்பமானது.





சவூதி அரேபிய மன்னர் சல்மானின் 'நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கான மன்னர் மையம்' (King Salman Humanitarian Aid and Relief Centre) இதற்கான நிதி அனுசரணை வழங்குகின்றது. சத்திரசிகிச்சை முகாம் எதிர்வரும் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதுடன் இதில் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த கண் வைத்தியர்கள் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்கின்றனர்.

இத்திட்டத்துக்காக நாடளாவியரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசோதனை முகாம்கள் மூலம் சகல இனங்களையும் சேர்ந்த வசதி குறைந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட நோயாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## ஒலுவிலில் ரஹ்மத் பவுண்டேசனால் பொதுக்கிணறுகள் நிர்மாணம்

**சாய்ந்தமருது விசேட, கல்முனை விசேட நிருபர்கள்**

ஒலுவில் பிரதேச மக்களின் நலன் கருதி வை.டபிள்யூ.எம்.ஏ. (YWMA) பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அமைப்பினால் பொதுக்கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

அப்பகுதி மக்களின் மிக நீண்ட கால குடிநீர் பிரச்சினைக்கு தீர்வொன்றைப்பெற்றுக்கொடுக்கும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# தேர்தல் காலத்தில் முதலைக் கண்ணீர் வடிப்பவர்களை மக்கள் அறிவார்கள்

## த.ம.வி கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன்

தமிழர்களின் ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மீண்டும் வந்து தேர்தல் காலத்தில் மட்டும் முதலைக் கண்ணீர் வடிப்பவர்களை மக்கள் நன்கு உணர்ந்துள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்துக்குட்பட்ட குருமண்வெளிக் கிராமத்தில் ரூ. 50 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கப்பட்ட வடிகான் அமைக்கும் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பட்டிருப்பு பிரதேசத்திலுள்ள மக்கள் கடந்த காலத்தில் தேர்தலில் வாக்களித்து அரசியல் அங்கீகாரத்தை தமிழ் தேசியம் பேசுகின்றவர்களுக்கு கொடுத்தார்கள். அதன் விளைவாக இப்பிரதேசத்தில் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் மிகவும் துன்பத்திலேயே வாழ்ந்தனர்.



ஆனால் சந்திரகாந்தன் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சு பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் பட்டிருப்புப் பகுதியில் பாரியளவிலான அபிவிருத்திப் பணிகளும், வீதி அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே வாக்களிக்கும்போது எந்த தலைவருக்கு வாக்களித்தால் எமது சமூகம் தலை நிமிர்ந்து வாழமுடியும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். அது தற்போது மக்களின் சிந்தனையாக மாறியுள்ளது.

தமிழரசுக் கட்சி தங்களுக்குள்ளேயே தலைவர்களைத் தேர்வு செய்வதற்கு நீதிமன்றத்தைச் செல்கின்ற நிலையில் மக்களுக்கு எதனைச் செய்யப்போகின்றார்கள். வாக்களித்த மக்கள் நடுத் தெருவில் நிற்கின்றனர்.

தமிழர்களின் ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மீண்டும் வந்து தேர்தல் காலத்தில் முதலைக் கண்ணீர் வடிப்பதையும் மக்கள் நன்கு உணர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், கிராம மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாவடிப்பள்ளி அரபுக் கல்லூரிக்கு முஷாரப் எம்.பி. நிதி ஒதுக்கீடு

**கல்முனை விசேட நிருபர்**



காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி மர்க்கஸ் சாஆத் இஸ்லாமிய்யா அரபுக் கல்லூரியின் அபிவிருத்திக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் ரூ.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அரபுக் கலாசாலையை மேம்படுத்தும் பொருட்டு கல்லூரி அதிபர் மற்றும் நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளை ஏற்று தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து இத்தொகையை அவர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந்நிதியின் ஊடாக தற்போது கல்லூரி மண்டபத்திற்கு மின்விசிறிகள் மற்றும் மின்சார உபகரணங்களை பொருத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# எயிட்ஸ், பாலியல் தொற்று நோய்கள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



எச்.ஐ.வி. பரிசோதனை மாதத்தை முன்னிட்டு இறக்காமம் இராணுவ படைவீரர்களுக்கான எச்.ஐ.வி/எயிட்ஸ் பரிசோதனை மற்றும் பாலியல் தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் இறக்காமம் இராணுவ முகாமில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புப்பிரிவின் ஏற்பாட்டில் அதன் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எல்.ஜலால்டீன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் சுகாதார மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அம்பாறை மாவட்டத்தில்

# கடலரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்தி கடலரிப்பிலிருந்தும் வெள்ள அபாயத்திலிருந்தும் அப்பிரதேசங்களை பாதுகாக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நாவிதன்வெளி, பொத்துவில், இறக்காமம், பாண்டிருப்பு, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, மருதமுனை போன்ற பிரதேசங்களில் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வு இடம்பெறுவதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால் கடற்கரை பிரதேசம் நாளாந்தம் கடலரிப்புக்குள்ளாகி வருகின்றது. அதுமட்டுமின்றி கடல்வாழ் உயிரினங்கள் அருகி வருவதுடன் மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

## அதிகரிக்கும் வெப்பநிலை! சருமநோய்களால் மக்கள் அசௌகரியம்

**நற்பிட்டிமுனை தினகரன், அட்டாளைச்சேனை குறூப் நிருபர்கள்**

அம்பாறை மாவட்டத்தில் வெப்பநிலை அதிகரித்துவருவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதுடன் தடிமல், இருமல், சளி, காய்ச்சல், வியர்வைக்கூர், நாக்குப் புண் போன்ற பல்வேறு நோய் நிலைமைகளுக்கு முகம்கொடுத்துவருகின்றனர்.

# சிறுவர் உரிமை விழிப்புணர்வு கலந்துரையாடல்

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

Minor Mortivation நிறுவனத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும் எனும் தலைப்பிலான கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், சட்டத்தரணிகள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், உள்ளூர் அரசியல் தலைவர்கள், விளையாட்டுகழகங்களின் தலைவர்கள், இளைஞர்கள், சமூக மட்ட தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

எய்ம்ஸ் சர்வதேச பாடசாலையின் பணிப்பாளரும் கணக்காளருமான எஸ்.எம்.ஏ.சக்கி, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எச்.றிபாஸ், சாத் நிறுவன பணிப்பாளர் ஏகே.அமீர் ஆகியோர் வளவாளராக கலந்து கொண்டனர்.




இதன்போது சமூகத்தில் சிறுவர்களுக்கு எதிராக வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் தெளிவுப்படுத்தப்பட்டன.

# இலவச மருத்துவ முகாம்

**தோப்பூர் குறூப், கிண்ணியா மத்திய நிருபர்கள்**



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலகம் மற்றும் மூதூர் சமுர்த்தி பிரதேச அமைப்பும் இணைந்து நடாத்திய இலவச மருத்துவ முகாம் நேற்று (08) பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் தலைமையில் மூதூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மூதூர் தள வைத்தியசாலை வைத்தியர் என். நிப்ராஸ் மற்றும் தாதி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு வைத்தியமுகாமை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

வைத்திய முகாமில் நீரிழிவு, இரத்த அழுத்தம், தொற்றாநோய்கள், கொலஸ்ட்ராலுக்கான இரத்த பரிசோதனைகளும், மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

வைத்திய முகாம் நிகழ்விற்கு பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், மூதூர் பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் என பலரும் கலந்துகொண்டனர்.




சம்மாந்துறை வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தின் 'கலைத்துளிர்கள் ' சஞ்சிகை வெளியீட்டு விழாவும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் ஊக்குவிக்கும் நிகழ்வும் அதிபர் கே. தியாகராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது . இவ்வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இதன்போது ஊக்குவிக்கப்பட்டதுடன் அங்கு 'கலைத்துளிர்கள்' என்ற சஞ்சிகையும் வெளியீட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

படம் :காரைதீவு குறூப் நிருபர்

## பரீட்சை இடைவேளையில் மாணவர்கள் வெயிலில் நடமாடுவதை தவிர்க்கவும்

சுகாதார பிரிவினர் அறிவுறுத்தல்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

| S | Bid NO | Description | Qty | Non Refundable fee (Rs) | Bid Security Value in (Rs) and Validity date |
|---|---|---|---|---|---|
| 01 | EP/APH/ACC/PRO/ CU/Drugs- 2024 | Supply of Veterinary Mobile & Farm Drugs | 115 Nos Type of Drugs & Poultry Vaccines | 3,500.00 | 250,000.00<br>13/09/2024 |

1. பெறுகை ஆவணங்களினை 09.05.2024 ஆம் திகதியிலிருந்து 30.05.2024 ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணிவரை திருகோணமலை உட்துறைமுகவீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்காக மக்கள் வங்கி திருகோணமலை கிளையில் மாகாணப் பணிப்பாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கிழக்கு மாகாணம், என்ற பெயரில் கணக்கு இலக்கம் 066-1-001-6-7200601 இற்கு மீளச்செலுத்த முடியாத வைப்புப் பணமாக ரூபா.3,500.00 இனை ஆவணத்திற்குச் செலுத்த வேண்டும்.
2. பெறுகை ஆவணங்களை மூடப்பட்ட உறையிலிட்டு 31.05.2024ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முதல் கிடைப்பதற்காக தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், கிழக்கு மாகாணம், உட்துறைமுகவீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கும் பெறுகை ஆவணத்தின் உறையின் இடதுபக்க மூலையில் பெறுகை இலக்கத்தினை குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.
3. உரிய நேரத்திற்கு பின் உடனே (31.05.2024) மு. ப. 10.30 மணிக்கு பெறுகை ஆவணங்கள் திருகோணமலை உட்துறைமுகவீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் திறக்கப்படும். இதற்காக பெறுகைதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்ற முடியும்.
4. இவ் விலைமனுக் கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலோ இப் பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுக் கோரலை இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
5. மேலதிக விபரங்களை உட்துறைமுகவீதி, திருகோணமலை கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில், மாகாணப் பணிப்பாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

தொலைபேசி : 026 - 2223058, 026 - 2222183
மின்னஞ்சல் : ep.aph.fin@gmail.com

**Dr. M.A. நதீர்,**
**மாகாணப் பணிப்பாளர்,**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**உட்துறைமுகவீதி,**
**திருகோணமலை.**

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

### தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

## பாவிக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக் கோரல்

**கேள்வி இல: NHDA/TRANSPORT/2024/DPC/01**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான பாவிக்கப்பட்ட கீழ்க்காணும் வாகனங்களை கொள்வனவு செய்து அகற்றிக் கொள்வதற்காக 2024.05.30 மு.ப 10.30 வரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அன்றே மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். 2024.05.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மோதர பிரதீபா மண்டப வளாகம், ரன்பொக்குனகம அலுவலக வளாகம், மாளிகாவத்தை அலுவலக வளாகம், மஹியங்கனை தேசிய இயந்திராதிகள் நிறுவன வேலைத்தளம் மற்றும் தலைமையக வளாகத்தில் இவ் வாகனங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விப் பத்திரங்களை விநியோகித்தல் 2024.05.29 பி.ப. 2.30 வரை மட்டுமே

| தொடர் இல. | வாகன இலக்கம் | உற்பத்தி ஆண்டு | வாகன மொடல் மற்றும் வகை | பரீட்சித்துப் பார்க்கக்கூடிய இடம் |
|---|---|---|---|---|
| 1 | - | - | டோசர் (உதிரிப்பாகங்கள்) | தேசிய இயந்திராதிகள் நிறுவன வேலைத்தளம் மஹியங்கனை |
| 2 | - | - | மோட்டர் கிரேடர் (உதிரிப் பாகங்கள்) | ரன்பொக்குனகம அலுவலக வளாகம் |
| 3 | - | - | ரோலர் (சிறிய) 01 (உதிரிப் பாகங்கள்) | மோதர பிரதீபா மண்டபம் |
| 4 | - | - | ரோலர் (சிறிய) 02 (உதிரிப் பாகங்கள்) | மோதர பிரதீபா மண்டபம் |
| 5 | - | - | இசுசு லொறி (பவுசர்) உதிரிப் பாகங்கள் | ரன்பொக்குனகம அலுவலக வளாகம் |
| 6 | - | - | டொயோட்டா வேன் ஒன்றின் உதிரிப் பாகங்கள் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 7 | JU - 7239 | 2005 | யமஹா மோட்டார் சைக்கிள் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 8 | MT - 9462 | 2006 | TVS மோட்டார் சைக்கிள் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 9 | MT - 9469 | 2006 | TVS மோட்டார் சைக்கிள் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 10 | MT - 9478 | 2006 | TVS மோட்டார் சைக்கிள் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 11 | 53 - 7841 | 1993 | மிட்சுபிஷி கெப் | மோதர பிரதீபா மண்டபம் |
| 12 | 54 - 1340 | 1993 | மிட்சுபிஷி கெப் | மாளிகாவத்தை அலுவலக வளாகம் |
| 13 | 54 - 1341 | 1993 | மிட்சுபிஷி கெப் | மாளிகாவத்தை அலுவலக வளாகம் |
| 14 | 54 - 5926 | 1994 | இசுசு கெப் | மாளிகாவத்தை அலுவலக வளாகம் |
| 15 | 251 - 7262 | 1998 | மிட்சுபிஷி கெப் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 16 | 251 - 7265 | 1998 | மிட்சுபிஷி கெப் | மாளிகாவத்தை அலுவலக வளாகம் |
| 17 | 251 - 7306 | 1998 | மிட்சுபிஷி கெப் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 18 | 253 - 4211 | 1999 | இசுசு கெப் | மாளிகாவத்தை அலுவலக வளாகம் |
| 19 | 253 - 4215 | 1998 | இசுசு கெப் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 20 | 253 - 4217 | 1999 | இசுசு கெப் | மாளிகாவத்தை அலுவலக வளாகம் |
| 21 | 253 - 4218 | 1998 | இசுசு கெப் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 22 | 42 - 4937 | 1990 | இசுசு லொறஜ பவுசர் | தலைமையகம் - கொழும்பு - 02 |
| 23 | 62 - 1305 | 1994 | டொயோட்டா ஜீப் | மோதர பிரதீபா மண்டபம் |
| 24 | JR - 7663 | 2005 | இசுசு குருகெப் | மோதர பிரதீபா மண்டபம் |

**கேள்வி பத்திரங்கள் விநியோகித்தல் :**

சகல விலைமனுக்களும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தில் மட்டும் குறிப்பிடுதல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரிக்கு பல வாகனங்களுக்கும் விலைமனுக்கள் சமர்ப்பிக்க முடிவதுடன், ஒவ்வொரு வாகனம் சார்பாகவும் வேறுவேறாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்காக தொடர் இல. 01 முதல் 10 வரை ஒவ்வொரு கேள்வி சார்பாகவும் மீளளிக்கப்படாத ரூபா 1000.00 மற்றும் VAT வரித் தொகையைச் செலுத்த வேண்டியதுடன், மீளளிக்கப்படும் பிணைத் தொகை ரூ. 2,000.00 ஆகும். தொடர் இல. 11 முதல் 24 வரையான ஒவ்வொரு கேள்வி சார்பாகவும் மீளளிக்கப்படாத ரூ. 2,000.00 மற்றும் VAT வரித்தொகையுடன், மீளளிக்கப்படும் ரூ. 10,000.00 பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக தொடர் இல. 22 இற்காக வரித்தீர்ப்பு தொகையை செலுத்துதல் வேண்டும். இது பற்றிய மேலதிக விபரங்களை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமையாளர் (போக்குவரத்து) இடம் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.
தொ.பே.இலக்கம் : 011 - 2382181

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,**
**சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை,**
**கொழும்பு - 02**

## கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகரசபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/PH/ BR/16/2024 | கொழும்பு-08, பொரளை மயானத்தின் 03 ஆம் மற்றும் 04 ஆம் இலக்க பௌத்த தகனசாலையின் கூரையின் உத்தேசிக்கப்பட்டுள்ள புதுப்பித்தல் | 5900.00 | 400,000 ரூபா (நிபந்தனையற்ற மற்றும் கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்) | சி-5, சி-6 மற்றும் சி-7 ஆகிய CIDA தரங்களுக்கு உரிமையுள்ள கட்டிட ஒப்பந்தக்காரர்கள் | பொறியியலாளர் பணிப்பாளர் (செயற்றிட்டம்) தொலைபேசி: 0112-692403 |
| 2. | ME/MR/ DR/12/2024 | கொழும்பு - 06 மெனிங் பிரதேசத்தில் மழைநீர் புதிய முறையின் நிர்மாணம் | 5900.00 | 940,000 ரூபா (நிபந்தனையற்ற மற்றும் கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்) | சி-04, சி-05 மற்றும் சி-06 CIDA தரங்களுக்கு உரிமையுள்ள மழைநீர் அகற்றல் மற்றும் தரை வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியலாளர் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 0112-674809 |
| 3. | ME/ME/ DR/03/2024 | கித்துள்வத்த வீதியில் மழைநீர் புதிய வடிகாலமைப்பு முறையின் நிர்மாணம் | 5900.00 | 722,000 ரூபா (நிபந்தனையற்ற மற்றும் கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்) | சி-4, சி-05 மற்றும் சி-06 CIDA தரங்களுக்கு உரிமையுள்ள மழைநீர் அகற்றல் மற்றும் தரை வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியலாளர் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 0112-674809 |
| 4. | ME/ME/ ML/21/2024 | கொச்சிக்கடை புனித அந்தோனியார் வீதியில் புனித அந்தோனியாரின் திருத்தலத்திற்கு முகப்பாக பெலிக்கன் கடவையை நிறுவுதல் | 5900.00 | 85,000.00 (நிபந்தனையற்ற மற்றும் கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்) | தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கடந்த 5 வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக் குறைந்தது 9 மாதங்களுக்கான செயற்றிட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் | பொறியியலாளர் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 0112-694593) |
| 5. | ME/ME/ ML/18/2024 | விஹார மஹாதேவி பூங்காவில் வயது வந்தவர்களுக்கான இரு பொது கழிவறைகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 5900.00 | 40,000.00 (நிபந்தனையற்ற மற்றும் கோரும் போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்) | | பொறியியலாளர் பணிப்பாளர் (காணிகள்) தொலைபேசி: 011-2695475 |

விலைமனு ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.**

I. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகரமண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவுவைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வாரநாட்களில் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை செலுத்தலாம்.

அனைத்து மாவட்ட அலுவலகங்கள்

- வட்டாரஅலுவலகம் 04,
  இல. 147,ஹைலெவல் வீதி, கிருலப்பனை,
  கொழும்பு 06.

II. பற்றுச்சீட்டின் மூலப்பிரதி/வங்கிவரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

III. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024.05.29ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரையில் நகரமண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு - 07, நகரமண்டபம்,கொழும்பு மாநகர சபை,மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. 2024.05.29ஆம் திகதியன்றுமு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பணக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனுமுறி/பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுமுறி/ பிணை 2024.11.26ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். முன்வைப்பானது 2024.12.26 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

இ. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளில் கொழும்பு - 07, நகரமண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.05.30 ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ 2024.05.30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். இந்தநாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்துவரும் வேலைநாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களுக்கான விபரமான அழைத்தலானது விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களின் விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்த பின்னர் பிசிஏ 3 படிவத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகரஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

## குருணாகல் பிரதேச சபையின் 2025 வருடத்தின் வரவு செலவு அபிவிருத்தித் திட்டம் தயாரித்தலுக்காக பரிந்துரைப்புக்களை பெற்றுக் கொள்ளல் சம்பந்தமாக பொது மக்களுக்காக விடுக்கப்படும் அறிவித்தல்

குருணாகல் பிரதேச சபையின் 2025 வருடத்தின் வரவு செலவு அறிக்கைக்காக தயாரிக்கப்படுகின்ற மூலதன செலவு தொடர்பான மதிப்பீடு மற்றும் அபிவிருத்தித் திட்டத்திற்கு உட்படுத்தலுக்கான பரிந்துரைப்பபுக்களை பிரதேச சபை எல்லை குடியிருப்பாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் படி, உங்களால் முன்வைக்கப்படும் பரிந்துரைப்புக்களை எழுத்து மூலமாக 2024 ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன், கையளிப்பு மூலமாக, தபால் மூலமாக, மின்னஞ்சல் மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக குருணாகல் பிரதேச சபைக்கு கிடைக்கப் பெறும் வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் அறியத் தருகிறேன். பரிந்துரைப்புக்களை முன்வைத்தல் தொடர்பாக மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபையின் கணக்குப் பிரிவில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை மேலதிகமாக அறியத் தருகிறேன்.

பிரதேச சபை எல்லை அபிவிருத்தி தொடர்பாக உங்கள் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பை மிகவும் பெருமிதமாக மதிக்கிறேன்.

**ஜே.ஏ அஜித் குமாரசிங்க,**
**செயலாளர்,**
**குருணாகல் பிரதேச சபை**

**முகவரி : உடதிகன , புத்தளம் வீதி, குருணாகல்**
**தொலைபேசி இலக்கம் : 0372222551 / 0372030500**
**தொலைநகல் இலக்கம் : 0372228197**
**மின்னஞ்சல் : kurunegalaps@gmail.com**

## வியாபார ஸ்தலத்தின் முகவரியை மாற்றம் செய்தல்

2023.07.24 முதல் இல. 18C, ஹில் வீதி, தெஹிவளை என்ற இடத்தில் நடத்திச் செல்லப்பட்ட **சன்வின் அடகு நிலையம்** 2024.05.03 முதல் **இல. 18, ஹில் வீதி, தெஹிவளை** என்ற இடத்தில் சன்வின் அடகு நிலையம் என நடத்திச் செல்லப்படுவதாக எமது வாடிக்கையாளர்களுக்கு தயுவுடன் அறித்தருகின்றோம்

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**2 எண்ணிக்கையான Fire Hydrant பம்பிகளின்**
**பெறுகைக்கான விலைமனு**
**B/27/2024**
**பிற்சேர்க்கை**

மேலேயுள்ள தலைப்பின் கீழ் இந்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணம் தொடர்பாக பங்குபற்றுவதற்கு ஆர்வமுள்ள எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் அழைக்கின்றது.

மேலே கூறப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான விலைமனுக்கோரல் ஆவணமானது மீளாக்கம் செய்யப்பட்டு இற்றைவரையாக்கப்பட்டுள்ளது. மீளாக்கம் செய்யப்பட்டுள்ள ஆவணமானது http://ceypetco.gov.lk/public-tenders/.. என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09,**
**இலங்கை.**

**தொலைபேசி: 0094-11-5455331**
**தொலைநகல்: 0094-11-5455424**
**மின்னஞ்சல்: supplies@ceypetco.gov.lk**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01 | வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலையின் கடுவலை முதல் கடவத்தை வரை குறுக்குவழிப் பிரிவில் அலைவரிசியை சரிசெய்தல்<br>கேள்வி இல. : RDA/EOM&M/OCH/Sur-Corr/2023/54 |
| 02 | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் கட்டமைப்பு அனுகுமுறைகளில் தீர்வுகளைச் சரிசெய்தல்<br>கேள்வி இல. : RDA/EOM&M/CKE/Corr@App/2024/11 |

தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் மேற்படி வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதராரர்கள் RDA மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk 2024.05.09 முதல் 2024.06.03 வரை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், RDA பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## மாலிம்பட பிரதேச சபைக்கு ஸ்டான்ட் உடன் சேர்ப் மற்றும் கதிரைகளை கொள்வனவு செய்தல் சார்பாக விலைமனுக் கோரல்

- மாலிம்பட பிரதேச சபை அலுவலகத்திற்காக ஸ்டான் உடன் சேர்ப் மற்றும் கதிரைகளை கொள்வனவு செய்தல் சார்பாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன
- மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் அலுவலக இணையதளத்தை பாவியுங்கள்
- உங்களது விலைமனுக்கள் மற்றும் தேவைப்படும் மாதிரிகளை 2024 மே 20 மு.ப. 10.00 இற்கு முன்பு சமர்ப்பிக்குமாறு இத்தால் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முகவரி - செயலாளர், பிரதேச சபை, மாலிம்பட, பாலடுவ, மாத்தறை**
**இணையதள முகவரி - www.malimbadaps.lk**
**அலுவலகம் - 041 - 2240208 (வழங்கல் அதிகாரி)**
**செயலாளர்**
**பிரதேச சபை**
**மாலிம்பட**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

### காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம் (CRIWMP)

### நீர்ப்பாசன அமைச்சு

(தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல்)

**IFB No.: CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 A to 01 F (06 Packages) & CRIWMP/PMU/PROC/2024/GOODS/06, 06A, 07, 07A, 08 & 09 (06 Packages)**

### புத்தளம், குருநாகல், திருகோணமலை, வவுனியா, மன்னார், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் காலநிலைக்குச் சீரமைவான விவசாய செயற்பாடுகளுக்கு உபகரணங்கள் / அமைப்புக்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல்

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது UNDP இன் தர அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்துடன் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து (GCF) காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட கிரயச் செலவிற்காக நிதியொன்றை பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் ஒரு பகுதியை மேலேயுள்ள வழங்கலுக்கு உரிய பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

02. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள புத்தளம், குருநாகல், திருகோணமலை, வவுனியா, மன்னார், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் காலநிலைக்குச் சீரமைவான விவசாய செயற்பாடுகளுக்கு உபகரணங்கள் / அமைப்புக்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (CRIWMP) செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக செயற்றிட்ட பணிப்பாளர், முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| IFB No. | Description of Package | No. of Units | District | Bid Guarantee Rs. |
|---|---|---|---|---|
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 A | Portable Solar Powered Pump for Cultivation Lands (Small – 5000 l/day), | 14 | Puttalam- 02, Kurunegala - 02 Trinco - 02, Vavuniya - 02, Mannar - 02, Anuradhapura - 02, Polonnaruwa -02 | 120,000/= |
| | Solar Powered Backpack Sprayer (16 L) | 10 | Puttalam- 01, Kurunegala - 01 Trinco - 03, Vavuniya - 01, Mannar - 01, Anuradhapura - 02, Polonnaruwa -01 | |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 B | Supply & Installation of Grid Tied Solar PV Systems (10 kW) | 10 | Puttalam- 01, Kurunegala - 01 Trinco - 03, Vavuniya - 01, Mannar - 01, Anuradhapura - 02, Polonnaruwa -01 | 450,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 C | Supply & Installation of Grid Tied Solar Power System (2kW) | 72 | Trincomalee- 26, Vavuniya - 06, Mannar - 11, Anuradhapura - 06, Polonnaruwa -21, Puttalam - 02 | 700,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 D | Supply & Installation of Sprinkler Irrigation System 01 Acre | 35 | Puttalam- 05, Kurunegala -05, Trinco - 05, Vavuniya - 05, Mannar - 05, Anuradhapura - 05, Polonnaruwa -05 | 175,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 E | Supply & installation of Polly Tunnel, Wormy Compost, and Drip Irrigation System (Urban School) | 07 | Puttalam- 01, Kurunegala - 01, Trinco - 01, Vavuniya - 01, Mannar - 01, Anuradhapura - 01, Polonnaruwa -01 | 200,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 F | Supply & Installation of Insect proof Net 40x40 holes per inch 3m width UV treated White colour 01 Acre | 35 | Puttalam - 05, Kurunegala -05, Trinco - 05, Vavuniya - 05, Mannar - 05, Anuradhapura - 05, Polonnaruwa -05 | 300,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/06 | Supply & Installation of Sprinkler Irrigation Systems 1/4 Acres | 100 | Puttalam- 15, Kurunegala - 15, Trinco - 15, Vavuniya - 10, Mannar - 15, Anuradhapura - 10, Polonnaruwa -20 | 300,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/06 A | Supply & Installation of Sprinkler Irrigation Systems 1/2 Acres | 65 | Trincomalee- 25, Vavuniya - 05, Mannar - 10, Anuradhapura - 05, Polonnaruwa -20 | 450,000/= |
| | Supply & Installation of 1/2 Acre Insect proof net | 65 | Trincomalee- 25, Vavuniya - 05, Mannar - 10, Anuradhapura - 05, Polonnaruwa -20 | |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/07 | Supply & Installation of Drip Irrigation (Online) 1/2 acres) system with 2000 L PVC tank | 100 | Puttalam- 15, Kurunegala - 15, Trinco - 15, Vavuniya - 10, Mannar - 15, Anuradhapura - 10, Polonnaruwa -20 | 750,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/07 A | Supply & Installation of 1/2 Acre Insect proof net and Polymulch | 100 | Puttalam- 15, Kurunegala - 15, Trinco - 15, Vavuniya - 10, Mannar - 15, Anuradhapura - 10, Polonnaruwa -20 | 850,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/08 | Supply & Installation of semi-automated 3,000 Sq ft Polytunnel | 10 | Puttalam- 01, Kurunegala - 01 Trinco - 03, Vavuniya - 01, Mannar - 01, Anuradhapura - 02, Polonnaruwa -01 | 675,000/= |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/09 | Supply & Installation of 500 Sq ft semi-automatic Mushroom Unit with racks | 7 | Puttalam- 01, Kurunegala - 01 Trinco - 01, Vavuniya - 01, Mannar - 01, Anuradhapura - 01, Polonnaruwa -01 | 250,000/= |

03. புத்தளம், குருநாகல், திருகோணமலை, வவுனியா, மன்னார், அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் காலநிலைக்குச் சீரமைவான விவசாய செயற்பாடுகளுக்கு உபகரணங்கள் / அமைப்புக்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதல் என்பன கேள்வி கையளிக்கப்பட்ட நாள் முதல் மூன்று (03) மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தகவுத்திறன் மற்றும் செயல்முறைத் திறனுக்கு அமைவாக கண்டிப்பாக முதலில் விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுவானது போதுமானளவு தகைமையுள்ள ஆகக்குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுவை நிர்ணயிப்பதற்காக ஒப்பீடு செய்யப்படும்.

05. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112672223 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவும் tendercriwmp@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

07. 2024-05-09ஆம் திகதி முதல் 2024-05-29ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒவ்வொரு பொதிக்குமான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளருக்கு வழங்குநரின் வியாபார தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான கோரிக்கையையும் மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500ஆம் இலக்கத்திலுள்ள 12ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

| IFB No. | Description of Package | No of Units | Non-Refundable Fee Rs. |
|---|---|---|---|
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 A | Portable Solar Powered Pump for Cultivation Lands (Small – 5000 l/day) | 14 | 3,000.00 |
| | Solar Powered Backpack Sprayer (16 L) | 10 | |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 B | Supply & Installation of Grid Tied Solar PV Systems (10 kW) | 10 | 7,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 C | Supply & Installation of Grid Tied Solar Power System (2kW) | 72 | 11,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 D | Supply & Installation of Sprinkler Irrigation System 01 Acre | 35 | 4,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 E | Supply & Installation of Polly Tunnel, Wormy Compost, and Drip Irrigation System (Urban School) | 07 | 4,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/01 F | Supply & Installation of Insect proof Net 40x40 holes per inch 3m width UV treated White colour 01 Acre | 35 | 4,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/06 | Supply & Installation of Sprinkler Irrigation Systems 1/4 Acres | 100 | 5,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/06 A | Supply & Installation of Sprinkler Irrigation Systems 1/2 Acres | 65 | 7,500.00 |
| | Supply & Installation of 1/2 Acre Insect proof net | | |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/07 | Supply & Installation of Drip Irrigation (Online) 1/2 acre) system with 2000 L PVC tank | 100 | 12,500.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/07 A | Supply & Installation of 1/2 Acre Insect proof net and Polymulch | 100 | 13,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/08 | Supply & Installation of semi-automated 3,000 Sq ft Polytunnel | 10 | 10,000.00 |
| CRIWMP/PMU/PROC/2024/GOODS/09 | Supply & Installation of 500 Sq ft semi-automatic Mushroom Unit with racks | 07 | 4,000.00 |

08. விலைமனுக்கள் திறக்கப்பட்ட நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் (விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 88 நாட்கள்) மேற்கூறிய இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP, செயற்றிட்ட பணிப்பாளரின் பெயரில் வரையப்பட்ட விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் உத்தரவாதமானது விலைமனு ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை மத்திய வங்கி (CBSL) / இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் (IRCSL) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி / காப்புறுதி நிறுவனத்தினால் (வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் தவிர்ந்த) வழங்கப்பட்டுள்ளதுமான நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாதமொன்றாகவிருத்தல் வேண்டும்.

09. விலைமனுதாரர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பவற்றை இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் உள்ளிட்டு அவைகளின் மேல் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிட்டு அதன் பின்னர் அவ்விரு உறைகளையும் ஒரு வெளியக தபாலுறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024-05-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் ஒப்பந்தக்காரார்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் 7ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் உடன் திறக்கப்படும். கொள்வனவாளர் விலைமனுதாரர்களின் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் என்பவற்றுக்கான எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பாகவிருக்க மாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10**

# மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடரை கைப்பற்றியது இலங்கை அணி




சமரி அத்தபத்துவின் அதிரடி சதத்தின் உதவியோடு ஸ்கொட்லாந்தை 68 ஓட்டங்களால் வீழ்த்திய இலங்கை மகளிர் அணி மகளிர் டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இதன்மூலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி, அவுஸ்திரேலியா, இந்தியா, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகளுடன் ஏ குழுவில் இடம்பிடித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடந்த டி20 உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியதன் மூலம் இலங்கை மற்றும் ஸ்கொட்லாந்து அணிகள் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற்ற நிலையிலேயே நேற்று முன்தினம் (07) பலப்பரீட்சை நடத்தின.

அபூதாபில் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இலங்கை மகளிர் அணியின் ஒருமுனை விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தபோதும் மறுமுனையில் ஆடிய அணித் தலைவியும் ஆரம்ப விராங்கனையுமான சமரி அபாரமாக செயற்பட்டார். 63 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 13 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 101 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் இலங்கை மகளிர் 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களை பெற்றது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய ஸ்கொட்லாந்து மகளிர் அணி மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் இலக்கை எட்ட முடியாத நிலை ஏற்பட்டது. அந்த அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களையே பெற்றது.

சிறப்பாக பந்துவீசிய இடது கை வேகப்பந்து வீராங்கனை உதேஷிகா பிரபோதனி 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். பத்து அணிகள் பங்கேற்ற இந்த தகுதிகாண் தொடரில் இலங்கை மகளிர் அணி அனைத்து போட்டிகளிலும் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

# DSI பாடசாலை கரப்பந்தாட்ட சம்பியன்சிப் ஜூனில் ஆரம்பம்




படம்: விமல் கருணாதிலக்க

இலங்கை கரப்பந்தாட்ட விளையாட்டின் முக்கியமான போட்டித் தொடரான 22ஆவது DSI பாடசாலை கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

கொழும்பு, நிப்பொன் ஹோட்டலில் நேற்று முன்தினம் (07) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் DSI நிறுவனம் இந்த அறிவிப்பை விடுத்தது. இலங்கை கரப்பந்து சங்கம் மற்றும் கல்வி அமைச்சின் பாடசாலை கரப்பந்து சம்மேளனத்தின் ஆதரவுடன் நாட்டில் முன்னணி வகிக்கும் பாதணிகள் உற்பத்தியாளரான DSI இந்த போட்டியை நடத்துகிறது.

இந்த ஆண்டு, நாடு முழுவதிலுமிருந்து 4,000 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்கும் என ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இதில் ஜூன் 15 தொடக்கம் ஜூலை 21 ஆம் திகதி வரை மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறும். தேசிய அளவிலான போட்டிகள் ஓகஸ்ட் 07 முதல் 11 வரை நடைபெறும்.

இறுதிப் போட்டிகள் நவம்பர் 02, 03 இல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பங்கள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து DSI காட்சியறைகளிலும் கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு, விண்ணப்பதாரர்கள் 0112669344 எனும் இலக்கத்துடன் இலங்கை கரப்பந்து சம்மேளனத்தை தொடர்புகொள்ளலாம். விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் மே 31 ஆகும்.

## சர்வதேச செய்திகள்



# போர் நிறுத்த பேச்சுக்கு மத்தியில் காசாவில் தொடர்ந்தும் தாக்குதல்

எகிப்துடனான காசா எல்லைக் கடவையை கைப்பற்றி அங்கு உதவிகள் செல்வதை மேலும் முடக்கி இருக்கும் இஸ்ரேல் இராணுவம் காசாவில் நேற்றும் (08) அதிரடித் தாக்குதல்களை நடத்தியதோடு போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் கடைசிக் கட்ட முயற்சியில் பேச்சுவார்த்தையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

காசாவில் இடம்பெயர்ந்த மக்களின் கடைசி அடைக்கலமாக உள்ள ரபாவில் சர்வதேசத்தின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் இஸ்ரேல் படை நடவடிக்கை ஒன்றுக்கு தயாராகி வருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமை எகிப்துடனான ரபா எல்லைக் கடவையை கைப்பற்றி இஸ்ரேல் இராணுவம் கிழக்கு ரபாவில் இருந்து பொதுமக்களை வெளியேற்றி வருகிறது.

இந்த நெருக்கடியான சூழலில் பேச்சுவார்த்தையாளர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் போர் நிறுத்தம் ஒன்றுக்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருக்கும் பணயக் கைதிகளை விடுவிப்பது மற்றும் எட்டு மாதங்களை தொட்டிருக்கும் போரை நிறுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இஸ்ரேலுக்கு இருக்கும் கடைசி வாய்ப்பு இதுவென்று பெயர் குறிப்பிடாத ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்க மத்தியஸ்தர்கள் கெய்ரோவில் ஹமாஸ் பிரதிநிதிகள் குழுவை சந்தித்து பேசியதாக எகிப்து அரசுடன் தொடர்புபட்ட அல் ஹகெரி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு அனைத்து தரப்பும் இணங்கி இருப்பதோடு இஸ்ரேல் தனது பிரதிநிதிகளை கெய்ரோவுக்கு அனுப்பியுள்ளது.

இரு தரப்பும் பிளவுகள் தொடர்பில் தீர்வு காணும் என்று நம்புவதாக இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது. 'அனைவரும் பேச்சுவார்த்தை மேசைக்கு வந்துள்ளனர்' என்று குறிப்பிட்ட அமெரிக்க தேசிய பாதுகாப்பு கௌன்சில் பேச்சாளர் ஜோன் கிர்பி, 'இது முக்கியமானதாகும்' என்றார்.

முன்னதாக ஹமாஸ் இணங்கிய போர் நிறுத்த முன்மொழிவை இஸ்ரேல் நிராகரித்திருந்தது. 'ஹமாஸின் முன்மொழிவு இஸ்ரேலுக்கு அவசியமான தேவைகளில் இருந்து மிகத் தொலைவில் உள்ளது. காசாவில் ஹமாஸ் கொடிய ஆட்சியை மீண்டும் அமைப்பதற்கு இஸ்ரேல் இடம் அளிக்காது' என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றிருக்கும் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. தலைவர் பில் பர்ன்ஸ், இஸ்ரேல் சென்று நெதன்யாகுவை சந்திக்கவிருப்பதாக நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரோட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ரபாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கை ஒன்றுக்கான திட்டம் மற்றும் அதனால் போர் நிறுத்தப் பேச்சுகள் முறியும் அபாயம் இருக்கும் சூழலிலேயே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

### தொடரும் தாக்குதல்கள்

கெய்ரோ பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியிலும் ரபா உட்பட இஸ்ரேல் காசா எங்கும் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தொடக்கம் சரமாரித் தாக்குதல்களை நடத்தியதாக பார்த்தவர்கள் மற்றும் உள்ளூர் மருத்துவமனையை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசா நகரில் உள்ள தொடர்மாடி ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் ஒரே குடும்பத்தில் ஏழு பேர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்ததாக அல் அஹலி மருத்துவமனை குறிப்பிட்டுள்ளது.

இதில் ரபா மீது கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில் 35 பேர் கொல்லப்பட்டு மேலும் 129 பேர் காயமடைந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா நேற்று தெரிவித்தது. மத்திய காசாவின் அல் கிஷ்டா கோபுரத்தின் கடைசி மாடி மீது இஸ்ரேல் நடத்திய பீரங்கித் தாக்குலில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக அங்குள்ள வபா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம் தெற்கு நகரான கான் யூனிஸின் குசா பகுதியில் இடம்பெற்ற இஸ்ரேலின் பீரங்கி தாக்குதல்களில் இரு பெண்கள் கொல்லப்பட்டு பலர் காயமடைந்துள்ளனர். காசாவில் 215 நாட்களுக்கு மேலாக இஸ்ரேல் இடைவிடாமல் நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இந்நிலையில் இஸ்ரேலின் உத்தரவை அடுத்து ரபாவில் இருந்து வெளியேறிய மக்கள் மத்திய காசாவின் டெயிர் அல் பலாவில் உள்ள அல் அக்ஸா மருத்துவமனையின் முற்றவெளிப் பகுதி மற்றும் அதற்கு அருகில் கூடியிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

'சுஜெய்யாவில் இருந்து நுசைரத்துக்கும், பின்னர் டெயிர் அல் பலாவுக்கும் தொடர்ந்து ரபாவுக்கு நான் இடம்பெயர்ந்தேன். இது நான் இடம்பெயர்வது ஐந்தாவது முறையாகும்' என்று முஹமது அல் குல் என்பவர் அல் ஜசீரா செய்தி நிறுவனத்திற்கு கூறினார்.

'நாம் எங்கே போவது என்று எமக்கு தெரியவில்லை. நிலைமை மோசமாக உள்ளது. தலைக்கு மேலால் செல்லும் செல் குண்டுகளுக்கு மத்தியில் இரவு முழுவதும் நாம் உறங்கவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இடம்பெயர்ந்த மற்றுமொரு பலஸ்தீனரான இமாத், 'மக்களின் எதிர்காலம் தெளிவாக இல்லை' என்றார். 'எனது குடும்பம் நான்கு பேரைக் கொண்டது, அதேபோன்று எனது சகோதரரின் குடும்பம் நான்கு பேரைக் கொண்டது. மொத்தம் எட்டுப் பேர் உள்ளனர். எம்மால் எங்கே போக முடியும்?' என்று அவர் கேள்வி எழுப்பினார்.

### உதவிகள் முடக்கம்

ரபா எல்லைக் கடவையின் பலஸ்தீன பக்கமாக இஸ்ரேலிய டாங்கிகள் கட்டுப்படுத்தி வரும் காட்சிகள் கடந்த செவ்வாயன்று (07) வெளியாகின.

இந்த எல்லைக் கடவையை கட்டுப்படுத்துவது ஹமாஸின் பயங்கரவாத ஆட்சியை நிறுவுவதற்கு அவசியமாக இருந்த வழி ஒன்றை மறுப்பதில் முக்கிய படியாக உள்ளது என்று நெதன்யாகு விபரித்துள்ளார்.

எனினும் காசாவுக்கான உதவிகள் செல்லும் மற்றொரு எல்லைக் கடவையான கெரம் ஷலோம் மற்றும் ரபா இரண்டையும் அணுகுவதை இஸ்ரேல் மறுத்து வருவதாக ஐ.நா. மனிதாபிமான அலுவலக பேச்சாளர் ஜேன்ஸ் லேர்க் தெரிவித்துள்ளார்.

இந்த எல்லைக் கடவைகளை உடன் திறக்கும்படி வலியுறுத்திய ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், இவை மூடப்படுவது ஏற்கனவே மோசமடைந்திருக்கும் மனிதாபிமான நிலைமை மேலும் பாதிப்புக்கு உள்ளாகும் என்று எச்சரித்தார். வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் ஜேன் பீரேவும் இதே நிலைப்பாட்டை வெளியிட்டதோடு, இவ்வாறு மூடப்பட்டிருப்பது 'ஏற்க முடியாதது' என்றார்.

'இஸ்ரேல் நிர்வாகம் உயிர் காக்கும் உதவிகளை முடக்கும் ஒவ்வொரு நாளிலும், மேலும் பலஸ்தீனர்கள் உயிரிழக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக' மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.

# இஸ்ரேலுக்கான அமெரிக்காவின் வெடிகுண்டு விநியோகம் நிறுத்தம்



காசாவின் ரபா மீதான படை நடவடிக்கைக்கு பயன்படுத்தக் கூடும் என்ற கவலை காரணமாக இஸ்ரேலுக்கான வெடிகுண்டு விநியோகம் ஒன்றை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது.

ரபா மீதான முக்கிய தரைவழி தாக்குதல் ஒன்று குறித்த அமெரிக்காவின் கவலைக்கு இஸ்ரேல் 'முழுமையாக பதிலளிக்காத' நிலையில் 907 கிலோ குண்டுகள் மற்றும் 226 கிலோ குண்டுகளை வழங்குவதையே அமெரிக்கா நிறுத்தி இருப்பதாக அமெரிக்க மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களை இஸ்ரேல் எவ்வாறு நடத்துகிறது என்பதை பொறுத்தே காசா மீதான அமெரிக்காவின் கொள்கை அமைந்திருக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த ஏப்ரலில் எச்சரிக்கை விடுத்த நிலையில் ஆயுதங்கள் நிறுத்தப்பட்டிருப்பது இது முதல் முறையாகும்.

அமெரிக்கா கடுமையாக எதிர்த்து வரும் ரபா மீதான தரைப் படை நடவடிக்கை ஒன்றை இஸ்ரேல் நெருங்கி இருக்கும் நிலையிலேயே அமெரிக்க நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளது.

'இதற்கான மாற்று வழி தொடர்பில் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் அதிகாரிகள் இடையிலான பேச்சுவார்த்தை இடம்பெற்று வருகின்றபோதும் எமது கவலை தொடர்பில் முழுமையான பதில் கிடைக்கவில்லை' என்று அந்த அமெரிக்க அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஆயுதக் களஞ்சியத்தில் இருக்கும் 907 கிலோ எடை கொண்ட வெடிகுண்டுகள் குறிப்பாக சனநெரிசல் மிக்க காசாவில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையாகும். அதிக வெடிபொருட்களால் பாரிய பள்ளங்கள் ஏற்படும் என்பதோடு அதன் பாகங்கள் விழுந்த இடத்தில் இருந்து நூற்றுக்கணக்கான அடி தூரம் வரை செல்லக் கூடியதாக இருக்கும்.

இந்த குண்டுகளால் காசாவில் 500க்கும் அதிகமான பள்ளங்கள் தோன்றி இருப்பது தொடர்பில் போரின் ஆரம்பத்தில் செய்மதி ஆதாரங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.



# மாணவர் விசா விதிகளை மேலும் நெருக்கியது ஆஸி.

சர்வதேச மாணவர் விசாக்களுக்கான நிதித் தேவையை அவுஸ்திரேலியா கணிசமாக அதிகரித்துள்ளது. சாதனை அளவான குடியேற்றம் மற்றும் மாணவர்கள் மீதான சுரண்டல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும் புதிய விதியின்படி, விசாவுக்கான தகுதிக்கு சர்வதேச மாணவர்கள் குறைந்தது 29,710 அவுஸ்திரேலிய டொலர் (19,576 அமெரிக்க டொலர்) சேமிப்பை காண்பிப்பது கட்டாயமாக்கப்படும்.

இது கடந்த ஏழு மாதங்களில் இடம்பெறும் இரண்டாவது அதிகரிப்பாகும். முன்னதாக கடந்த ஒக்டோபரில் 21,041 அவுஸ்திரேலிய டொலரில் இருந்து 24,505 அவுஸ்திரேலிய டொலர்களாக அதிகரிக்கப்பட்டது.

மாணவர் விசா கட்டுப்பாட்டை தொடர்ந்து அதிகரித்து வரும் அவுஸ்திரேலியா கடந்த மார்ச்சில் அந்த விசாவுக்கான ஆங்கில மொழித் தேவைகளை அதிகரித்தது.

# கொவிட் தடுப்பு மருந்தை மீட்டது அஸ்ட்ராசெனக்கா




அஸ்ட்ராசெனக்கா நிறுவனம் அதன் வக்ஸ்செவ்ரியா கொவிட்–19 தடுப்புமருந்தை உலக அளவில் மீட்டுக்கொண்டுள்ளது.

அந்தத் தடுப்புமருந்து அரிதான, ஆபத்தான பக்கவிளைவை ஏற்படுத்தக்கூடும் என்பதை நிறுவனம் சில மாதங்களுக்கு முன் ஒப்புக்கொண்டது. தடுப்புமருந்தை மீட்டுக்கொள்வதற்கான விண்ணப்பத்தை நிறுவனம் மார்ச் மாதம் 5ஆம் திகதி சமர்ப்பித்தது. அது நேற்று (08) நடப்பிற்கு வந்தது. அந்தத் தடுப்புமருந்து உற்பத்தி செய்யப்படவோ விநியோகிக்கப்படவோ இல்லை என்று நிறுவனம் குறிப்பிட்டது. வக்ஸ்செவ்ரியா தடுப்புமருந்தால் சில பக்கவிளைவுகள் ஏற்படக்கூடும் என்று அண்மைய மாதங்களில் கூறப்பட்டது. இரத்தம் கட்டிக்கொள்ளக்கூடும், இரத்தத் தட்டணுக்களின் எண்ணிக்கை குறையக் கூடும் என்று கூறப்பட்டது.

ஆனால் வர்த்தகக் காரணத்திற்காகவே தடுப்புமருந்தை மீட்டுக் கொள்ளும் முடிவு எடுக்கப்பட்டதாக அஸ்ட்ராசெனக்கா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 9ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.